செந்தமிழ்

தொகுதி	திருவள்ளுவர் ஆண்டு 2003 பங்குனி	பகுதி
67	மார்ச்சு 1972.	3

உள்ளே:-

			பக்கம்
1.	பைந்தமிழ்த் தொண்டர் பாண்டித் துரையார்.	...	1
2.	தமிழில் வினைப் பெயர்	...	4
3.	சார்பெழுத்து	...	5
4.	தமிழ் நூல்களுள் யானை-(தொடர்ச்சி)	...	8
5.	நற்றாய்	...	13
6.	ஈழத்தில் சில பழந்தமிழ் மரபுகள்	...	16
7.	மொழியியல் கலைச்சொல் விளக்கம்	...	20
8.	திராவிட மொழிகளில்...(தொடர்ச்சி)	...	32
9.	சங்கச் செய்திகள்		
	தமிழில் தூய்மை எற்றுக்கு	...	41
	புலவர் தேர்வு முடிவுகள்	...	46
	சிறந்த மாணவர்கட்குப் பரிசளிப்பு	...	52

பைந்தமிழ்த் தொண்டர் பாண்டித்துரையார்

— *செஞ்சொற் பாவலர்: ப. சங்கரலிங்கம்*

தன்னாட்டைத் தாய்வீட்டைத் தகதகக்கும் தங்கத்தட்டைப்
பொன்னேட்டைப் புகழ்தேட்டைப் பொலிவுமிகு
[காஞ்சிப்பட்டை
வெள்ளையராம் கொள்ளையர்பால் வீரத்தின் விளைநிலத்தை
அள்ளிடவே குறையாத அருநிதியை அடகுவைத்துக்
கால்கழுவி வால்பிடித்து காக்கையைப்போல்
குருவியைப்போல்
நாளெல்லாம் புகழ்பாடி நலிந்தனரே இந்நாட்டார்!
தாய்மொழியைத் தன்விழியைத் தெய்வத்தைத் தான்மறந்து
பேய்நோய்போல் நாய்நரிபோல் பெருமையற்றுச்
[சிறுமையேற்றுச்
சிறகொடிந்த பறவையாகச் சித்திரப் பதுமையாக!
பொரியெனவே தஞ்சாவூர்ப் பொம்மையாக வாழ்ந்தபோது
தென்பாண்டிக் கடல்முத்தாய்! தீந்தமிழின் நறுஞ்சத்தாய்!
தென்னாட்டின் பெருஞ்சொத்தாய்! தென்றலாய்த்
[தேன்நிலவாய்!
ஆண்டசேது மரபினிலே அருந்தமிழர் பெருந்தவத்தால்
பாண்டியராய்த் தோன்றினரே பாண்டித்துரை அண்ணலவர்!
குலைவாழை இலையிட்டே கூப்பிட்ட விருந்தினைப் போல்
கலைத்தமிழின் நிலையுணர்ந்தோர்! கலைவாணர்! அலையிடையே
விவேகானந்த வீரனையே வெளியுலகாம் அமெரிக்கா
நவமுடனே அனுப்பி இந்து நற்சமய நெறிகாத்த
பாசுகர சேதுபதி பைந்தமிழின் மைந்தரவர்
மாசிலார்! மாணிக்க மன்னரவர் திருமுன்னர்
நந்தமிழ் நாட்டாரெல்லாம் நறுந்தமிழ் முந்திக் கற்க
செந்தமிழ்க் கல்லூரியைச் சேலமாம் பழமாய்க் கண்டார்!

கனலுண்டும் புனலுண்டும் செல்லுண்டும் சிதைந்ததமிழ்ப்
பணத்தோட்டம்! புதைபொருளே! மலைத்தேனே! கலையூற்றே!
மூலைதனில் கிடந்தஓலை முழுவதுமே திரட்டிவந்து
நூலாக்கிக் கல்வெட்டாய்! நிலவிடும் சாலைகண்டார்!

தண்வைகைப்பெருமணல்போல்! தளிர்ஆலின் விழுதினைபோல்!
மண்காணுப் பன்னூலைப் பசும்பொன்போல் பாதுகாத்தார்!
எள்ளுக்குள் எண்ணெய்யைப் போல் இருந்தமிழின்
அருங்கருத்தை
அள்ளியேதான் தந்திடவே ''செந்தமிழ்'' மலர்வித்தார்!
தான்வாழ்ந்த வளமனையைத் தமிழ்வளர்க்கும் கோயிலாக்கி
நாண்மலர்போல் தண்டமிழை நாளெல்லாம் வாழ்வித்தார்!
மல்லிகைப்பூ மணத்தினைப்போல் மருக்கொழுந்து வாசம்போல்
எல்லையிலாப் புலமையரை இம்மண்ணில் தோற்றுவித்தார்!
இயலிசை நாடகத்தில் இசைபோயர்! துரைபோயர்!
கயமலர்போல்! கயல்விழிபோல்!கவினடைந்தார் நாள்தோறும்
பாண்டியரே ஆண்டுவந்த பண்டைநகர் மதுரைதனில்
மாண்டமிழ்ச் சங்கத்தை மீண்டுந்தான் கண்டுவந்தார்!
அடையாத நெடுங்கதவால் அள்ளீயும் கொடைக்கையால்
மடைவெள்ள உளமதனுல் மலைவளம்போல் நலந்துய்த்தோர்!
அவர் உணவால் மணம் பெற்ருேர்! அவர் உதவ
[உயர்ந்தோர்கள்!
அவர் உப்பால் வாழ்ந்தோர்கள்! அலைகடல்போல் பலராவார்!
ஓரிருவர் மூவரெனில் ஒருவாறு கூறிடுவேன்!
ஆயிரம்பேர் பயனடைந்தால் அவர்பெயரை உரைப்பதெப்போ?
பாரியவன்! காரியவன்! பயன்கருதாத் தமிழ்த் தொண்டால்!
மாரியவன்! பாண்டித்துரை மாண்பிற்கோர் உவமையிலை!
அறம்பொருள் இன்பம்சொல் ஆற்ருேர்தம் தேன்பாவைப்
பெருவெண்ணெய்த் திரட்டினைப்போல் 'பன்னூலாம்
[நுங்கீந்தார்!
சைவத்தின் சிறப்பையெல்லாம் சரிவர உணர்ந்துண்ணச்
'சைவநல் மஞ்சரி'யைச் சந்தனம்போல் உவந்துதந்தார்!
சிவஞான முனிவர்தம் செழுஞ்சைவ நெறிபோற்றிப்
பவமறுக்கும் பெருநூலைப் பைந்தமிழைப் பிழிந்துதந்தார்!

சிவஞான முருகனையே காவடிச் சிந்துதனுல்
நவநவமாயப் பாவடித்து நறுந்தமிழில் பெருமை சேர்த்தார்!
எண்ணில்லா நன்னூல்கள் இம்மண்ணில் தோன்றிடவே
பொன்கோடி முதலாக்கிப் பேரச்சுப் பொரியமைத்து
'வில்லியர்தம் பாரதமும்' விரி'ஞானமிர்தமும்'
சொல்வல்ல கதிரைபோல் 'தமிழக ராதியையும்
சிங்காரவேலரது செழுஞ்'சிந்தா மணி'யையும்
பொங்கலைப் போல் தித்திக்கப் புதுமையுடன் பதிப்பித்தார்!
தமிழ்த் தாத்தா சாமிநாதர் தந்ததமிழ் நூல்களலாய
அமிழ்து நிகர்'மேகலை'யும் அரும்புறப் பொருளி'னையும்
'தேவார தலமுறை'யைத் திருராம சாமியாரும்
'வாதவுரை மறுப்பினையே சபாபதி நாவலரும்
சுன்னுகம் குமாரசாமி செந்தமிழ் நூல் பலவிடவும்
எண்ணுது பொன்பொருளை இருகையால் அள்ளியீந்தார்!
காட்துரையார் திருக்குறளைக் கண்டபடி திருத்திடவே
கேட்டிட்ட தேவரவர் கீழ்மையரின் நூலை எல்லாம்
முந்நூறு கொடுத்திட்டு முந்நூறு படிகளையும்
தன்னூரில் குழிபறித்துத் தீயிட்டே மிகமகிழ்ந்தார்!
பாண்டிதுரை செய்தவுயர்ப் பயன்கருதாத் தொண்டினைப்போல்
ஈண்டுயாரும் செய்ததுண்டோ? இயம்பிடுவீர்! இயம்பிடுவீர்!
சங்கத்துக் கீரனுக்குச் செந்தமிழ்ச் சேரனவன்
மஞ்சத்தே துயின்றிடவே மான்கவரி வீசியபோல்
நாராயண ஐயரெனும் நறுந்தமிழின் அறிஞரவர்
பேராய மஞ்சத்தில் பெருந்துயிலில் ஆழ்ந்திருக்க
பாண்டிதுரை மன்னரவர் பண்பாளர் விசிறியினுல்
தீண்டறியத் திருக்கையால் திகைத்திடவே வீசிநின்றுர்
வாளெடுக்கும் வரைக்கைகள் வண்டமிழ்ப் புலவர்தம்
தாள்வருடி விட்டதென்றுல் தமிழ்த்தொண்டை யாதென்பேன்!

தமிழில் வினைப் பெயர்

டாக்டர் கி. கருணாகரன், எம். ஏ , பிஎச். டி.,
டிப்-இன் கன்னடா,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

தமிழ் 'வினை'யில் (Verb) 'வினைப்பெயர்' (Participial Noun) என்ற ஒரு இலக்கணப் பிரிவு (Grammatical categary) உள்ளது. தமிழில் பெயரெச்சத்தால் உண்டாகும் வினையால் அணையும் பெயர் **வினைப்பெயர்** [1] என்று சொல்லப்படுகிறது. பெயரைச் சத்துடன் (Relative Participle) – **அன்**, – **அள்**, - **அர்(கள்)**' – **து** ஆகிய 'பின்னொட்டுக்களை'ச் (Suffixes) சேர்த்து வினைப்பெயர்கள் பெறப்படுகின்றன.

தமிழில் வினைப்பெயர் கீழே கொடுக்கப்பட்டுள்ள 'சொல்லியல் அமைப்பை'க் (Mcrphological Structure) கொண்டதாக உள்ளதை நாம் அறிவோம்.

வினைப்பெயர்: சொல்லியல் அமைப்பு

1		2		3		4
வினையடி	+	காலம் காட்டும் சொல்லியன்கள் & எதிர்மறைச் சொல்லியன்	+	பெயரெச்சச் சொல்லியன்	+	இடப் பெயயர் விகுதிகள்

எ. காட்டு:

	1		2		3		4		
1)	பார்	+	த்த்	+	அ	+	அன்	>	பார்த்தவன்
2)	செய்	+	கிற்	+	அ	+	அள்	>	செய்கிறவள்
3)	நட	+	ந்த்	+	அ	+	அர்கள்	>	நடந்தவர்கள்
4)	சொல்	+	ப்	+	அ	+	அர்	>	சொல்பவர்
5)	ஆடு	+	வ்	+	அ	+	து	>	ஆடுவது
6)	வர்	+	ஆத்	+	அ	+	அன்	>	வராதனன்
7)	ஓடு	+	ஆத்	+	அ	+	து	>	ஓடாதது

1. A.H. Arden, A Progressive Grammar of the Tamil Language, The CLS, Madras, [1969 reprinted] PP: 216—219.

தமிழில் வினைப்பெயர் அதை அடுத்தும் நிற்கும் வினைச் சொல்லுடன் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆறு வகையான 'இலக்கணத் தொடர்புகளை'க் [2] கொண்டதாக வருவதை நாம் காணலாம். வினைப்பெயர்களும் மற்ற பெயர்ச் சொற்களைப் (NOUNS) போலவே வேற்றுமைச் சொல்லியன்களை (Case suffixes) எடுத்துக்கொள்கிறது.

1. இலக்கணத் தொடர்புகள் (Grammatical Relationships)

1-1. எழுவாய்-பயனிலைத் தொடர்பு: Subject Predicate)

நான் ஓடுகிறவனைப் பார்த்தேன்

1-2. செயப்படு பொருள்-பயனிலைத் தொடர்பு: (Object-Predicate)

நான் நீங்கள் சொல்வதைச் செய்வேன்

1-3. மூன்றும் வேற்றுமை-பயனிலைத் தொடர்பு: (Sociative Predicate)

நீ படித்வனோடு சேராதே

1-4. காரணம்-பயனிலைத் தொடர்பு: (Instrumental Predicate)

அவன் வெட்டினது உள்ளே இருக்கிறது

1-5. நான்காம் வேற்றுமை-பயனிலைத் தொடர்பு: (Dative Predicate)

---

2. Dr. S. Agesthialingom, **A. Generative of Grammar Tamil,** [DLP, 11], Annamalainagar, 1967.

Dr. K, Karunakaran, **The Kollimalai Tamil Dialect,** [DLP, 26] Annamalainagar, 1971

கர்ணன் கேட்பவர்களுக்குக் கொடுத்தான்

1-6. **ஏழாம் வேற்றுமை-பயனிலைத் தொடர்பு:**
(Locative-Predicate)

அங்கே இருப்பவர்களில் ஒரு போக்கிரி இருக்கிறான்

இங்கு கொடுக்கப்பட்டுள்ள வினைப்பெயர் வாக்கியங்கள் அனைத்தும், இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட வாக்கியங்களை இணைத்தே பெறப்படுகின்றன. இவ்வாறு இணைக்கப்படும் வாக்கியங்களுள் ஒன்று 'அகப்படும் வாக்கியம்'[3] (Constituent Sentence) என்றும் மற்றொன்று 'அகப்படுத்தும் வாக்கியம்' (Matrix Sentence) என்றும் சொல்லப்படும். அகப்படும் வாக்கியத்தை அகப்படுத்தும் வாக்கியத்துள் இணைக்கும் பொழுது. அகப்படும் வாக்கியத்தில் உள்ள 'வினை முற்றி' லிருந்தே 'வினைப்பெயர்' பெறப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட சயெலைச் செய்பவரை (Doer of the action) வினைப்பெயர் குறிப்பிடும்.

எ. காட்டு.

அவன் படிக்கிறான் (C. S.)
நான் அவனைப் பார்த்தேன் (M. S.)

இவ்விரு வாக்கியங்களையும் இணைக்கும் பொழுது நமக்கு **நான் படிக்கிறவனைப் பார்த்தேன்** என்ற வினைப்பெயர் வாக்கியம் (Participial Noun construction) கிடைக்கிறது. இதில் **படிக்கிறவன்**–ஐ என்ற வினைப்பெயர் **படிக்கிறான்** என்ற 'வினை முற்று'டன் (Finite Verb) **அவன்-ஐ** என்ற இடப்பெயர் [Personal Pronoun] சேரும்போது நமக்குக்கிடைக்கிறது. இந்த **படிக்கிறான்** என்ற வினை முற்று **அவன் படிக்கிறான்** என்ற அகப்படும் வாக்கியத்தில் வருகிறது

3. R. Kothandaraman, 'முற்றெச்சங்கள்', **செந்தமிழ்,** மதுரை, 1971.

இவ்வாறு 'சொல்லியல்' [Morphology] பகுதியில் அதன் 'அமைப்பில' [Structure] மிகவும் எளிதான ஒன்ருகக் காணப் படும் **வினைப்பெயர்** தமிழ் மொழியின் 'சொற்ருெடரியல், [Syntax] பகுதியில் அதன் அமைப்பிலும், பல்வேறு இலக் கணத் தொடர்புகளால் உண்டாகும் பொருள் மாற்றங்களிலும் [Semantic changes] மிகவும் சிக்கல் வாய்ந்த ஒன்ருகக் காணப்பகிடுறது – கருதப்படுகிறது[4] தமிழில் வினைப்பெயர், அதன் சொற்ருெடரியல் அமைப்பில் கொண்டுள்ள இத் தன் மைகளையும் பல்வேறு இலக்கணத் தொடர்புகளின் விளைவு களையுமே இக்கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது எனலாம்.

கீழே கொடுக்கப்பட்ளள்ள விளக்கப் படங்கள் எவ்வாறு அகப்படும் வாக்கியம் அகப்படுத்தும் வாக்கியத்தில் இணைக் கப்படுகிறது. என்பதையும், இவற்றிலிருந்து தேவையான வாக்கியங்கள் பெறப்படும் முறையையும் தெளிவாக விளக்குகின்றன-

1. 1. **எழுவாய் – பயனிலைத் தொடர்பு**

நான் **ஓடுகிறவனைப்** பார்த்தேன்

அவன் ஓடுகிருன் (C. S.)

நான் அவனைப் பார்த்தேன் MS.

---

4. Dr. S. Agesthialingam, 'Infinitive in Tirukkural', **Aayvukkovai,** Annamalainagar, 1971.

4-D



—> **நான் ஓடுகிறவனைப் பார்த்தேன்**

1. 2. *செயப் பொருள் பயனிலைத் தொடர்பு*

நான் நீங்கள் சொல்வதைச் செய்வேன்

நீங்கள் அதைச் சொல்வீர்கள் (C. S.)

நான் அதைச் செய்வேன் (M. S.)



—> நான் நீங்கள் சொல்வதைச் செய்வேன்

1. 3. மூன்ரும் வேற்றுமை - பயனிலைத் தொடர்பு

நீ படித்வனேடு சேராதே

அவன் படித்தான் (C. S)

நீ அவனேடு சேராதே (M. S.)

4-F



—> நீ படித்தவனோடு சேராதே

1. 4. காரணம் – பயனிலைத் தொடர்பு

அவன் வெட்டினது உள்ளே இருக்கிறது

அவன் அதனால் வெட்டினான் (C. S.)

அது உள்ளே இருக்கிறது (M. S.)

4-G



—> **அவன் வெட்டினது உள்ளே இருக்கிறது.**

1.5 நான்காம் வேற்றுமை — பயனிலைத் தொடர்பு

கர்ணன் கேட்டவர்களுக்கு கொடுத்தான்

அவர்கள் கேட்டார்கள் (C. S.)

கர்ணன் அவர்களுக்கு கொடுத்தான் (M. S.)



—> **கர்ணன் கேட்டவர்களுக்குக் கொடுத்தான்**

1. 6. ஏழாம் வேற்றுமை — பயனிலைத் தொடர்பு

அங்கே இருப்பவர்களில் ஒரு போக்கிரி இருக்கிறான்

அவர்கள் அங்கே இருக்கிறார்கள் (C. S.)

ஒரு போக்கிரி அவர்களில் இருக்கிறான் (M. S.)

4-I



—> ஒரு போக்கிரி அங்கே இருப்பவர்களில்

1 2 3

—> 1 + 2 + 3 + 4 —> 2 + 3 + 1 + 4

—> அங்கே இருப்பவர்களில் ஒரு போக்கிரி இருக்கிருன்.

Abbreviations

வா —> வாக்கியம்

பெ.தொ —> பெயர்த் தொடர்

வி.தொ —> வி.தொடர்

வி —> வினை

வி. அ —> வினை அடை

வே —> வேற்றுமை

பெ —> பெயர்

இ வே —> இரண்டாம் வேற்றுமை

மூ.வே —> மூன்ரும் வேற்றுமை

நா.வே —> நான்காம் வேற்றுமை

இ.பெ —> இடப்பெயர்

ஏ.வே] —> ஏழாம் வேறறுமை

பிழை திருத்தம்

பக்கம்	இடம்	பிழை	திருத்தம்
4	முதல் பத்தி 2-வது வரி	(Grammatical Categary)	(Grammatical Category)
4	முதல் பத்தி 5-வது வரி	பெயரைச் சத்துடன்	பெயரெச் சத்துடன்
4	எ. காட்டு 6	வராதனன்	வராதவன்

சார்பெழுத்து

— ந. மு. கோவிந்தராய நாட்டார்

1. எழுத்தெனப்படுப
அகர முதல் னகர இறுவாய்
முப்ப:.தென்ப
சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே

2. அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன.

இவையிரண்டும் தொல்காப்பியத்தின் முதல் இயலாகிய 'நூன்மரபை'த் தொடங்கும் நூற்பாக்களாகும். தொல்காப்பியம் முழுமைக்கும் உரையெழுதிய காரணத்தானும், முதன் முதல் எழுதிய காரணத்தானும் இளம்பூரணரை பின்வந்த உரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியர், சேனாவரையர் பேராசிரியர், கல்லாடர், தெய்வச்சிலையார் ஆகியோர் 'உரையாசிரியர்'' எனும் சிறப்புப் பெயர் கொடுத்து வழங்கலாயினர். இளம்பூரணர். நச்சினார்க்கினியர், பேராசிரியர், இவர்கள் உரையே எழுத்ததிகாரத்திற்குள்ளது சிறப்புப்பாயிரத்திற்கும் முதல்நூற் பாவுக்கும் இவர்கள் உரையுடன் சிவஞான முனிவர் உரையும் உளது. அரசன் சண்முகனார் சிறப்புப்பாயிரத்தற்குத் தனியாக விரிவுரை கூறியுள்ளார்.

இவ்வுரையாசிரியர் எல்லோரும் நுண்மான் நுழை புலத்தவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. இவர்கள் உரைகளின் உதவியின்றி இக்காலத்து நாம் பல நூற்பாக்களின் பொருளை ஐயமறத்தெரிந்து கோடலும் முடியாது. எனினும்,

*"அரியகற் றாசற்றார் கண்ணும் தெரிவியுங்கால்
இன்மை அரிதே வெளிறு"
"அறிதோ றறியாமை கண்டற்றால்".*

என அறிவுறுத்தியுள்ள தெய்வப்புலவர் கட்டளையின்படி எத்துணைப் பேரறிஞராயினும் ஒரோவழி தவறுதல் இயல்பே. அவ்வாறு தவறினும் அவர்களுடைய பெருமை சற்றும் குறையாது. மேலும் இக்காலத்து நூலாராய்ச்சி செய்வோருக்குள்ள துணைக் கருவிகள் அக்காலத்து உரையாசிரியர்களுக்குக் கிடைத்திரா.

சிறப்புப்பாயிரத்தின் பிற்பகுதிக்கும், மேற்காட்டியுள்ள இரண்டாம் நூற்பாவுக்கும், தொல்காப்பியத்தின் நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகியவற்றில் சில நூற்பாக்களுக்கும் இவ்வுரையாசிரியர்கள் எழுதியுள்ள உரைகள் தவறானவை என, 'தமிழ் எழுத்தொலிநூல்' அல்லது 'உலகப் பொதுதமிழ் எழுத்தொலி' எனும் என் நூலில் தக்க சான்றுகள் காட்டி நிறுவியுள்ளேன். இதன்கண் சார்பெழுத்து மூன்றிணையும் பற்றி விரிவான ஆராய்ச்சியும் எழுதியுள்ளேன். ஈண்டு இவற்றைப் பற்றிய விளக்கம் கூறாமல் சார்பெழுத்தெனும் பெயர்க்குரிய காரணத்தை மாத்திரம் விளக்குகின்றேன்.

மேற்காட்டிய இருநூற்பாக்களிலும் ஆசிரியர் தமிழ் எழுத்துக்கள் மூப்பத்து மூன்னெ வரையறை செயதுள்ளார். இவவரையறை தொல்லோர் கொண்டதெனச் சுட்டவே 'என்ப' என்றும் கூறிப் போந்தார். ஆய்தம் நாம் இற்றை நாள் கொண்டுள்ளபடி அருகிவழங்கும் செய்கை உடையதன்று புலவர் புராணமுடை யார் ஆய்தத்தை "வேறான் றெண்ணிடற்கரியதாகும் எஃகம்" எனக் கூறியுள்ளார். ஆய்தத்தின் வரிவடிவத்தையும், அதன் பொருளையும், பெருமையினையுங் குறித்து மேற்கூடிய என்நூலில் இருபத்து மூன்று பக்கங்களில் விளக்கியுள்ளேன். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் குறுகிய இகரம் உகரம் என்னும் எண்ணத்தை அறவே மறக்கவேண்டும். இவை குறுகிய இகர உகரங்களின் வேறான

ஒலிகள். இதனுலேயே ஆசிரியர் இவற்றை எழுத்தெண்ணிக் கையில் ஆய்தத்துடன்சேர்த்து சார்ந்துவருமரபின் மூன்றெழுத் துக்களென விதந்தோதினுர். குறுகிய இகரவுகரங்களாயின் இவை நூன்மரபில் கூறப்படாமல் மொழிமரபில் ஐகாரஔ காரக் குறுக்கங்களுடன் கூறப்பட்டிருக்கும், மேலும் ஆசிரியர் பிறப்பியலில்

''சார்ந்து வரினல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனமூன்றும்'' என்ற நூற்பாவில்

இவை தனி ஒலியுடைய எழுத்துக்களென வலியுறுத்தியுள்ளார் சிவஞானமுனிவரும் முதல் நூற்பா விருத்தியில் இவைதனி ஒலிகள் என நிலை நிறுத்தியுள்ளார்.

ஆசிரியர் தொல்காப்பியனுர், இவ்வாறு சார்பெழுத்தின் தன்மையினை விளக்கியிருந்தும், பவணந்திமுனிவர், உயிர்மெய், அளபெடை, குறுக்கம் இவற்றுடன் குற்றியலிகம், குற்றியலு கரங்களையும் சேர்த்துச் சார்பெழுத்து பத்தெனவும். இவற்றின் விரிமுந்நூற்றறு பத்தொன்பது எனவும் கூறியுள்ளார். இஃதறி யாமையின் பாற்பட்டதே. இவ்வாறு கூறிப்போந்த சார்பெ ழுத்துக்களில் பல தமிழ்மொழிக்கு வேண்டாதன என்பதனை முனிவர் அறிந்திலர் போலும். ஙகர உயிர்மெய் வரிசையில் ஙகரத்தைத்தவிர ஏனைய பதினென்றும் தமிழ்மொழிக்கு வேண்டப்படாதன என்பதனை அறிந்ததனுலன்றே ஔவை மூதாட்டியார் 'ஙப்போல்வளை' எனும் ஆறெழுத்து ஒருவாக் கியத்தில் மிகப்பெரிய பொருளை உள்ளடக்கிச் சொல்லிப் போந்தனர். சார்பெழுத்து மூன்றின் ஒலித்தன்மையினை விரிவாக விளக்கித் தமிழ்மொழியின் எழுத்துக்களால் உலக மொழிகள் அனைத்தையும் சிறிதும் ஒலிவழுவிலாது எழுத வியலும் என்பதனை மேற்கூறிய என் நூலில் விளக்கி யுள்ளேன்.

தமிழ் நூல்களுள் யானை:- 2

சித்தாந்த சைவமணி வித்துவான் சு. காளீச்சுரன் திருவையாறு.

வள்ளுவத்துள்:—

தொல்காப்பியத்தினைப் பயிலும்போதே யானையின் அமைப்பு, வாழுமிடம், அதனியல்பு, போன்றவற்றை எவ்வாறு உணர்ந்துகொள்ளுகின்றோமோ அவ்வாறே வள்ளுவத்தைப் பயிலும்போதும் நாமறிந்து மகிழ்கின்றோம். நீதியோடு வன விலங்கொன்றைப் பற்றிய வாழ்வினையும் நாமறிகின்றோம். நமது வள்ளுவப் பெருந்தகையார் பொருட்பாலில் இடனறிந்து. ஊக்கமுடன், வினைசெயல் வகையில், பொருள் செயல் வகையைச் செய்து, படைச் செருக்குடன் மன்னன் வாழுதல் வேண்டும் என்னும் நீதிகளை எடுத்துக் காட்டுகையில் யானையின் இயல்புகளையும் இணைத்து நாமறியச் செய்கின்றார்.

யானை வாழத் தகாஇடம்:

யானை களர் நிலத்தில் வாழாது. ஏன்? யானை அந்நிலத்தில் பலத்துடன் வாழ இயலாது. நடக்கக்கூட முடியாது காலாழ்கின்ற களர்நிலமாயினும் அந்நிலத்தில் நரிகூட யானையை வென்று விடும், இவ்வாறு தோற்கும் யானை சாதாரணமான அச்சங்கொள்ளும் யானையா? இல்லவே இல்லை. வேலோடு கூடிய வீரர்களை கொம்பினாலேயே கொன்று தூக்கும் யானை. இத்தகைய யானையே நரியிடத்துக்கூடத் தோற்குமானால் நிலைமை என்ன? அந்நிலம் யானை வாழுவதற்கு ஏற்ற இடமன்று என்பதுதான். இவ்வாறு வல்லபமுள்ள யானையே இடவேறுபாட்டால் தோல்வியடைய நேரிடுகின்றதென்றால் நாம் ஒரு காரியத்தை இடம் நோக்கிச் செய்தல் எவ்வளவு முக்கியமானதென்பதைச் சிந்திக்க வைக்கின்றார் வள்ளுவப் பெருமான்.

"காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு"

பாதுகாப்பு வடிவம்:

யானை வாழு மிடத்தைப் பற்றி வள்ளுவத்தாலறிந்து கொண்ட நாம் யானையின் வடிவத்தைப் பற்றியும் அறிகின்றோம். விலங்குகளின் வடிவமே அதற்குப் பாதுகாப்பாக அமைவதை விஞ்ஞானிகள் நன்கெடுத்துக் காட்டுவர். இதனைப் பாதுகாப்பு நிறம், தற்பாதுகாப்பு எனவுரைப்பர். இவ்வாறே யானையும் மலையினிடையேயும், காட்டினிடையேயும், வாழும் இயல்பினதாதலால் அதற்கேற்ப மலையிடையேதான் பாதுகாப்பாக வாழும் நிலையில் சிறு குன்றின் அமைப்பாகப் பெரிய வடிவத்தைப் பெற்றிருக்கிறது. மேலும் பதுகாப்பிற்காகக் கொம்பினையும் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு விலங்கிற்கும் பகை விலங்குண்டு. எலிக்குப் பூனை பகை, பூனைக்கு நாய் பகை. இவ்வாறு யானைக்குப் பகை புலி, யானையைவிடப் புலி சிறியதாயினும் ஊக்கத்தால் யானையை வெல்லுகின்றது என வள்ளுவப் பெருந்தகை நமக்குக் காட்டுகின்ருர்.

''பரியது கூர்ங் கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்''

யானையின் ஊக்கம்:

இவ்வாறு புலிக்கஞ்சும் யானை போர்க்களத்தில் அஞ்சாது புதையாகிய அம்பாற் புண்பட்ட விடத்தும் தளராது எதிர்த்துத் தாக்கும். இத்தகைய வீரப்பண்பை யானையிடத்துக் காணலாம். இத்தகைய தளர்ச்சியற்ற ஊக்கம் வேண்டுமென்று நமக்கு யானையை எடுத்துக்காட்டுகின்ருர் வள்ளுவர்.

சிதைவிடத் தொல்காருரவோர் புதையம்பின்
பட்டுப்பா டூன்றும் களிறு''

யானைப்போர் காணும் முறை:

இத்தகைய யானைகள் ஒன்றனேடொன்று போர் செய்யும் காட்சி சிறந்தது இத்தகைய யானைப் போரைக் காண்பதற்கு

நாம் எங்கிருந்து பார்த்தல் வேண்டும், தரையினின்றும் பார்த்தால் போரில் ஈடுபட்ட யானை ஓடி வருங்கால் நாம் அந்த யானையின் வேகத்தில் ஓட இயலாது. அதுவுமின்றி அச்சத்தோடு காட்சி பார்த்தால் இன்பம் தராது. மரத்தின் மீது ஏறி நின்று பார்ப்போமானால் அவ்யானைகள் கோபத்தால் அம்மரங்களையும் அசைத்தல்கூடும். மலைமேலேறி நின்று யானைப் போரைக் காணுவோமானால் தரையினில் நிகழும் யானைப்போர் நன்றாகத் தெரியும். நாமும் அச்சமோ வருத்தமோ கொள்ள வேண்டியதில்லை இக்காட்சியை நமக்குக் காட்டுவதன் மூலமாகத் திருவள்ளுவப் பெருந்தகையார் தன கையதாகிய பொருளுக்கேற்ப வினை செய்பவன் குன்றேறி யானைப் போரைக் காண்பவனொப்பான் எனப்பொருள் செயல் வகையை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

''குன்றேறி யானைப் போர் கண்டற்றாற் றன்கைத்
தொன்றுண்டாகச் செய்வான் வினை''

யானை பிடிக்கும் முறை:

இத்தகைய யானைகளை எவ்வாறு பிடித்து அடக்கிப் பழக்கிப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்? என்று எண்ணத் தொடங்குகின்றோம். வேறு விதங்களில் பிடிக்கும் யானைகளை விட, யானைகளைக் கொண்டே பிடிக்கும் யானைகளை வீரம் குன்றுது செயற்படப் பழக்க எளிதாக விருக்கும். யானையைக் கொண்டு யானையைப் பிடிக்கின்ற காட்சியையும் செய்கின்ற தொழிலாலே பிற தொழிலை முடித்துக்கொள்ளும் திறனுக்கு நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்.

''வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று''

வீரனும் யானையும்:

இத்தகைய யானையை அடக்கி வெல்பவனே வீரன். காட்டில் வேட்டையாடினாலும் போரில் எதிர்த்தாலும் எவ்வெம்

 Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR MADRAS

மிருகங்களை எவ்வாறு எதிர்த்தல் வேண்டும் என்ற நியதியுண்டு. முயலெனில் அம்பினல் எய்யலாம். ஏன்? அஃது மிகவும் விரைவாக ஓடும். அதனோடு சிறிய மிருகம்-யானையை வில்லைக் கொண்டு அம்பெய்தலாகாது வேலால் எறிதல் வேண்டும். ஒரு வீரன் வெட்டவெளியிலே முயலைக் குறி தப்பாமல் எய்தலினும், அத்தகைய அம்பினை ஏந்தலினும் வெள்ளிடை நின்ற யானையை எறிந்து பிழைத்த வேலை ஏந்துதல் நன்று. இவ்வாறு படைச் செருக்கை வள்ளுவப் பெருந்தகையார் நமக்குக் காட்டும்போது மாற்றரசன் படை புறங்கொடுத்ததாக நாணி ஒரு வீரன் பின் வென்றவன் மேல் செல்லுகையில் இவ்வாறு கூறுகின்றான் என்கின்றார்.

"கானமுய லெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது."

யானைமீது வேலெய்தலே சிறப்பு என்பதனை மற்றொரு காட்சியிலும் நமக்குக் காட்டுகின்றார். ஒரு வீரன் தன்னை எதிர்த்த யானையை வேலால் எறிய யானை மீண்டும் எதிர்க்கச் சிரித்துக் கொண்டே அவ்வீரன் தனது மார்பில் முன்பு எய்யப்பட்ட வேலை எடுத்து எதிர்க்கின்றான். இத்தகைய வீரனது இயல்பினையும், யானையின் திறத்தையும் நமக்குக் காட்டுகின்றார்.

இத்தகைய யானையின் முகத்தை பொன்னாலான படால்மி கண்ணை மறைக்கும்படியாக அணிகின்றார்களே இதனால் அழகு வெளிப்படினும் உள்ளேயுள்ள வெம்மைத் தன்மையும் மறைக்கப்படுகிறதே அஃதேபோல் மாதர்போல் மாதர்முலை மேல் துகில் என்று இன்பத்துப் பாலினும் யானையின் அலங்காரத்தை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

வள்ளுவமும் யானையும்:

இதுகாறும் சிந்தித்தவாற்றால் யானை களர் நிலத்தில் வாழத் தகுதியற்றது என்பதும், தனது பகையாகிய புலியினிடத்திலிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற் கேதுவாக

மலையினிடை மலையாகக் காட்சியளிக்கும் நிலையில் வடிவும் தந்தமும் கொண்டு வாழ்கிறதென்றும், யானையின் போர்த் திறத்தினையும் அதனைப் பிடிக்கும் திறத்தினையும், யானைப் போரை எவ்வாறு காணவேண்டுமென்பதையும், யானைப்போரி லுள்ள சில நியதிகளையும் யானையின் அலங்கார வணியையும் வள்ளுவத்திநின்றும் அறிந்து மகிழ்ந்தோம் இனி எட்டுத் தொகை நூல்களுள் ஒன்ருகிய நற்றிணை கூறுவனவற்றை நாட முயலுவோம்.

நற்ருய்

— *புலவர் திருமேனி நாகராசன்.*

இலக்கியத்திற்கு இன்றியமையாதவளாய் இருப்பவள் தலைவி. அத்தன்னேரில் தலைவியைப் பெற்றவள் நற்ருய் ஆனல், அவளைப் பற்றி இலக்கியத்துள் அறிதல் அரியதே. அவள் பாலில் வெண்ணெய் போலவும். பழத்தில் சுவை போல வும் இருந்து பயன் தருபவள் என்க. அவளை இங்கு இனம் கண்டு கொள்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நற்ருய் என்பது நன்மை + தாய் எனப் பகுக்கப்படும். நன்மை என்பது சிறப்புப் பண்புப் பெயராம். எனவே, தாயா னவள் சிறப்புக் கருதி நற்ருய் எனப்பட்டாள் என்க. இனித் தாய் என்னும் சொல்லாட்சி செவிலித்தாயை உணர்த்து மெனத் தொல்காப்பியர் உரைத்தலால், அவளின் வேறுபடுத் தற்கு நற்ருய் என அழைக்கப்பாற்ருள் என்று கொள்ளினும் பொருத்தமே!

நற்ருய் தலைவியை ஈன்றதோடு அமைந்து விடுகிருள். அத்தலைவியைத் தளிரிளங் குழவிப் பருவத்தே எடுத்து வளர்க் குறும் இயல்பினள் செவிலி என்க. அக்குழவி தானும் வளர்ந்து வாலைப்பருவம் உறுங்காறும் அதற்குக் கல்வியும் ஒழுக்கமும் கற்பித்து உண்டி போற்றி உறையூறும் ஈந்து நாளும் கண்ணினும் மேலாய்க் காக்கும் கடமையினள் செவிலி யாகும். பின்னரும் வாலைப் பருவம் வந்துற்ற தலைவியைத் தன் மகளினும் மேலாய் மதித்து, அவளை அவட்குத் தோழியாயும் அமைத்து ஏமம செய்யும் இயல்பினள் செவிலி. அத்தோழி உயிர்த்தோழியுடனும், தன்னெத்த பிறநங்கையருடனும் சோலை யுள் சென்று வெவ்வேறிடங்களில் பூக்கொய்துழி அக்கால் ஊழான் ஆண்டு ஒருதலைவனை எதிர்ப்படுவாள். தலைவன் உள்ள

மும் தலைவி உள்ளமும் ஒன்றுபடும். அன்று தொட்டு களவொழுக்கம் அவ்விருவர்க்கும் நீடும் தலைவியானவள் தோழிக்குப் பட்ட நிலையெப் பாங்குடன் எடுத்துரைப்பாள். ஒருநாளிரவு தோழியின் துணையால் தலைவி தலைவனுடன் அவனூர் சென்றிடுவாள். மறுநாள் காலையிற் செவிலி தன் மனையிடத்தே தலைவியைக் காணுமே வையம் பிளந்தது போலவும், வானம் இடிந்தது போலவும் கலக்குற்று அழிவாள். அவளைத் தேடிப் பாலைவழிச் சென்று பாடிப் பெயர்தலும் உண்டு. அவ்வாறன்றிக் குறியிடங்கள் சென்று மீளும் தலைவியின் உடல், உள்ள வேறுபாடுகளைக் கண்டு செவிலியானவள் தலைவியை இல்லில் இருத்தி நடந்தன ஆராய்தலும் உண்டு. அவ்வாறு ஆயுங்கால் தோழி தன்தாயாம் செவிலியிடம் களவொழுக்கத்தை முறைப்படி எடுத்துரைப்பாள். இறைவன் திருவுள்ள இயல்பு இதுபோலும் எனஎண்ணிய செவிலியும் மகிழ்வுற்று நற்றாயிடம் சென்று பட்டநிலை பாங்குடன் பகர்ந்து கடிமணத்திற்கு அந்நற்றாயையும் உடன்படுத்துவாள். இப்படியெல்லாம், எப்படி நோக்கினும் தலைவி வாழ்வுக்காகத் தன்வாழ்வையும், மகளாம்தோழி வாழ்வையும் ஈகம் செய்பவள் செவிலி என்பது போதரும்.

ஈண்டு ஒரு கேள்வி எழும், அஃது யாதெனில், பெற்ற மகளைப் பிறிதொருத்தியிடம் (செவிலியிடம்) நற்றாய் கொடுப்பது ஏன்? என்பதே. நற்றாய் இல்லிருந்து தற்காத்தும், தற்கொண்டான் பேணியும், அவன் பெற்றோர் புரந்தும், செல்வி விருந்தோம்பி வருவிருந்திற்கெனக் காத்தும், அறம் பொருள் இன்ப வழிகளில் ஒவ்வொரு நாளும் ஓவாமே தொண்டாற்றும் உயர்பொறுப்பினள் ஆதலின், தன் மகளை வளர்ப்பதற்குரிய காலம் இன்மையால் தன்னிலும் வேறுபடாத செவிலியிடம் தன் மகளை வளர்த்து ஆளாக்கும் வண்மையினை வழங்குவாளாயிற்று, என அறிந்து கொள்க. படைப்புக்காலந் தொட்டே யாரிடத்தும் மகளை வளர்க்குறும் பண்பினள் செவிலியே எனச் செந்தமிழ் இலக்கியங்கள் செப்புமாற்றான் அறிக.

எனவே இக்காரணங்ளான் நற்ருய் மகளைச் செவிலி வளர்ப்பா ளாயினள் என அறிந்து கொள்க.

இனி ஒரோவழி செவிலிக்கு உரியதாகக் காட்டப்படும் பேச்சுக்கள் (கூற்றுகள்) எல்லாம் நற்ருயிடமும் தோன்றவும் பெறும் என்பது ஒரு கொள்கை எப்படி? ○''தாய்க்கும் வரை யார் உணர்வுடன் படினே'' என்பது தொல்காப்பியம் ஆதலின். இதனுல். நற்ருய் செவிலியின் உணர்வோடு உடம்பட்ட உள் ளத்தளாக இருக்கும்போது அவளுக்கும் செவிலிக்கு உரிய கூற்றுக்கள் எல்லாம் உண்டென்பது புலனுகிறது. செவிலிக்கு உரிய கூற்று யாவெனில், களவலராதல் முதலாக இருபாற் குடிப்பொருள் இயல்பின் கண்ணும் ஈருகச் சொல்லப்பட்ட பதின்மூன்று+ கூற்றுக்களுமாம் என்க. இனித் தாய்க்கும் என்ற உம்மையால் செவிலியே தலைவியை வளர்க்கும் வாய்ப் பினள் ஆதலின், நற்ருய்க்கு இப்படி யெல்லாம் பேச்சு பயின்று வாராதென்பது சான்ருேர் கொள்கை. அன்றியும் நற்ருய்க்கு இப்படிப் பேச்சு இருப்பதாகச் செந்தமிழ் இலக்கியங்களிலும் காணப்பட வில்லை.

இவ்வாருக நற்ருயின் ஒழுக்கம் வரையறுத்துக் காணப் படுகிறது. நற்ருய் இலக்கியத்துள் இலைமறை கனிபோலவும், பால்படு வெண்ணெய போலவும் மறைந்து இருப்பினும் அவளைத் துருவிக் காணும் இலக்கிய ஆயவாளருக்கு அவள் யாண்டும் தோன்றிச் சுவை பயந்து நிற்பாள் என்பது உறுதி. அறத்தாற்றில் ஒழுகும் ஆரவாரிப்பில்லா அமைதி வாரிதி யான நற்ருய் தலைவி புகழ் எண்ணப்படும்போது எல்லாம், தானும் உடன் எண்ணப்பட்டுச் சிறப்புச் செய்யப்படுவாள் என்பது உறுதி.

○ *தொல்காப்பியம் - களவியல் - நூற்பா எண்* : 25
+ *தொல்காப்பியம் - களவியல் - நூற்பா எண்* : 113

ஈழத்தில் சில பழந்தமிழ் மரபுகள்

— சி. சத்தியமூர்த்தி, எம்.ஏ., ஆய்வாளர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்.

நாள்தோறும் தன்னுள் வைக்கும் பல்வேறு உணவுப் பண்டங்களை வைத்தவாறே காட்டிநிற்கும் சிற்றுண்டிச் சாலைக் கண்ணாடிப் பெட்டிபோலச் சொற்களும் தம்மைப் பேசும் மக்கள் காலந்தோறும் கொடுக்கும் பொருள்களையே கைக் கொண்டு வாழ்கின்றன. முன்பு "நாற்றம்" என்ற சொல் மணம் என்ற பொதுப்பொருளில் வழங்கியது நறுமணம், கெட்ட மணம் இரண்டையும் அச்சொல் குறித்த செய்தியை,

> *"நரந்த நாறுந் தன்கையாற்*
> *புலவு நாறு மென்றலை தைவரு மன்னே* — (புறம் 235:8–9)

என்ற ஔவையார் பாடலடிகளால் அறியலாம். அதியமானை இழந்த ஔவை போலவே, நாற்றம் சுட்டும் முன்னைய நறு மணப் பொருளைக் காலப்போக்கில் நாம் இழந்துவிட்டோம். கெட்ட மணம் என்ற பொருளில் மட்டும் அச்சொல் தொடர்ந்து வாழ்ந்துவரக் காண்கின்றோம்

கெட்ட மணம் என்ற பொருளில் ஈழத்தில் பெருகிக் காணப்படும் நாற்றம் என்ற சொல், நறுமணம் என்ற பொரு ளிலும் அங்கு அருகி வழங்குவது பழந்தமிழ்ச் சொற்பொரு ளைக் காத்து நிற்கும் மரபினைக் காட்டுவதாகும். வெற்றிலை மெல்வதற்குப் பயனபடுத்தப்படும் நறுமணப் பாக்கு, "நாறற் பாக்கு" என்று வழங்குவதை இன்றும் ஈழத்துப் பேச்சுத் தமிழில் கேட்கலாம். இப்பாக்கைப் பதப்படுத்தும் முறை, பெயர்க்காரணத்தைப் புலப்படுத்தத் துணைபுரிகிறது. ஒரு சாடியைத் தூய்மை செய்து ஈரம் உலரக் காயவைத்தபின்

இலுப்பை யெண்ணெயை உள்ளே பூசிப் பாற்சாம்பிராணிப் புகையூட்ட வேண்டும். பின்னர் தோல் பழுதில்லாத கமுகம் பழப்பாக்குகளை நன்ருகக் கழுவித் தண்ணீரிலிட்டு நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு ஊறவைத்துத் தோலை அழுக விட வேண்டும். தோல் அழுகியபின் சில நறுமணப் பொருள்களைப் (இவ் வாசனைத் திரவியங்கள் யாழ்ப்பாணம் மருந்துக் கடைக்காரரிடம் பெறப்படும்) பெற்று இடித்துப்பொடியாக்கிச் சாடிக்குள் இட்டுப் பாக்குகளுடன் ஒரு மாத காலம் ஊற வைத்தல் வேண்டும். அதன்பின் பாக்குகளை எடுத்துத் தோல்களை நீக்கியவுடன் ஒவ்வொன்றும் நறுமணம் வீசும் ''நாற்றற் பாக்கு'' ஆகப் பயன்படுத்தும் நிலை எய்துகிறது [1] மேற்கண்ட சொல்லாட்சி, நாற்றம் என்ற சொல் நறுமணம் என்ற தொன்மைப் பொருளுல் ஈழத்தில் உயிர் வாழ்வதை உணர்த்துகிறது.

கடல்கொண்ட தமிழகத்தில் குறும்பனை நாடு ஒன்ருகும். சேரமன்னருக்குத் தாராக அமைந்தது பனந்தோடு. இத்தகைய பனைதரும் உணவுப்பண்டங்கள் பல. அவற்றுள் ''பனுஅட்டு'' ஒன்று. பனம்பழச்சாற்றைப் பாயிற்பரப்பி வெய்யிலில் அட்டுப் பதப்படுத்தும் இவ்வுணவுப்பண்டத்தை இன்றும் ஈழத்தின் வடமாநிலமாகிய யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் ''பனுட்டு'' என்றே அழைக்கின்றனர். இத்தொன்மைத் தமிழ்ச் சொற்குத் தொல்காப்பியர்,

''பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் ருகும் ஐயென் உயிரே.
ஆகாரம் வருதல் ஆவாயி ஞன்'' (தொல்:எழு:284) என்று

புணர்ச்சிவிதி கூறுகிருர். JAFFNA CHOCOLATE என்று ஒரு சிலரால் செல்லமாக அழைக்கப்படும் இவ்வுணவுப் பண்டத்தைக் காலஞ்சென்ற ஈழத்து. நாவாலியூர். க. சோமசுந்தரப் புலவர் அவர்கள் (1880–1953), ''செங்கதிரோன் சுடும் இந்தப்பலகாரம்'' எனப் பாடினர். ''மன்னுநீர் ஞாலத்து

---

1. நாறற்பாக்குப் பதப்படுத்தும் முறையை எனக்கு அறியத் தந்தவர் யாழ்ப்பாணம், சிவதொண்டன் நிலையம் அ. செல்லத்துரை அவர்கள்.

வான்பனையின் மேன்மையெல்லாம் பன்னுகலிவெண்பாவாற் பாடிய'' அப்புலவரின் ''தால விலாசம்'' [2] என்ற நூலிலுள்ள பின்வரும் பாடற்பகுதி (114-170) பனாட்டின் வகைகளையும் அவை செய்யும் முறைகளையும் எடுத்துக் கூறுகிறது;—

''. செல்வப் பனாட்டின் திறமுரைப்பேன்—மெல்லியலே
சுத்தத் தலத்திற் றெருடையுயரப் பந்தரிட்டு
மெத்தச் சுசியாய் மெழுகியே—யத்திமுகத்
தைங்கரனைப் பூசனைசெய் தையா பனைப்படைப்பை
இங்கிதமாய்க் காப்பா யெனத்தொழுது—பங்கமின்றி
வெட்டிப் பழுத்தகனி வீழ்கனிக ளைக்கழுவித்
தட்டி நெகிழ்த்துரித்துத் தானடுக்கி—வட்டக்
கடகங் களிலிட்டுக் காடிவடித் தூற்றித்
திடமாகச் சேர்த்துப் பிசைந்து—கொடுமிடிமை
துன்று நலத்தைத் துருவி யுறப்பதுபோல்
ஒன்று களியை யுறந்தெடுத்து—நன்றாகப்
பின்னுமொரு கால்வேறு பெட்டியிலிட் டுப்பிசைந்து
மன்னுங் களிபிழிந்து வார்த்தொன்றாய்ச்—சொன்னபடி
கிஞ்ஞாச் செடியின் கிளைக்கூட்டி ஞற்றுழலி
யெஞ்சாது குந்தை யெடுத்தெறிந்து—செஞ்செலே
முன்னஞ்செய் பந்தர் முழமா றிரண்டுடைய
பன்னஞ்செய் பாய்மேற் பரவியே—நன்னயமாய்
மாலை மடித்து வழிநாட் சுடர்தோன்றுங்
காலை விரித்துக் களிபரவி—மேலைவித
மெட்டு நாளெட்டுக் களிவிட் டிறுகியிறை
மட்டதா கத்தடித்து வந்ததற்பின்—திட்டமுடன்
உப்புப் பிரண்டையிரண் டொக்கவதன் மேற்றூவித்
தப்பாமற் சாணுக்குச் சாண்கீறிச்—செப்பமிலாப்
புல்லர்பா லிச்சகம் பேசிப் பொருள்பெறல்போல்
வல்லமெல்லப் பாயிதழை வெட்டாமல்—நல்லகூர்த்
தட்டகப்பை யாற்புல்லுச் சத்தகத்தாற் றண்ணீரிற்
றெட்டெடுத்துச் சூரிய வெப்பத்தில்-வட்டக்
குடிலின்மேற் காயவைத்துக் கொண்டவிதழ் போக்கி

---

2. *''இலங்கை வளமும் தாலவிலாசமும்''*—நவாலியூர், **க. சோமசுந்தரப்** *புலவர்*, **ஸ்ரீ சண்முகநாத அச்சகம், வண்ணார்பண்ணை, விரோதி ஆண்டு ஆவணித் திங்கள்.**

இலுப்பை யெண்ணெயை உள்ளே பூசிப் பாற்சாம்பிராணிப் புகையூட்ட வேண்டும். பின்னர் தோல் பழுதில்லாத கமுகம் பழப்பாக்குகளை நன்ருகக் கழுவித் தண்ணீரிலிட்டு நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு ஊறவைத்துத் தோலை அழுக விட வேண்டும். தோல் அழுகியபின் சில நறுமணப் பொருள் களைப் (இவ் வாசனைத் திரவியங்கள் யாழ்ப்பாணம் மருந்துக் கடைக்காரரிடம் பெறப்படும்) பெற்று இடித்துப்பொடியாக் கிச் சாடிக்குள் இட்டுப் பாக்குகளுடன் ஒரு மாத காலம் ஊற வைத்தல் வேண்டும். அதன்பின் பாக்குகளை எடுத்துத் தோல் களை நீக்கியவுடன் ஒவ்வொன்றும் நறுமணம் வீசும் ''நாற்றற் பாக்கு'' ஆகப் பயன்படுத்தும் நிலை எய்துகிறது [1] மேற்கண்ட சொல்லாட்சி, நாற்றம் என்ற சொல் நறுமணம் என்ற தொன் மைப் பொருளுடன் ஈழத்தில் உயிர் வாழ்வதை உணர்த்துகிறது.

கடல்கொண்ட தமிழகத்தில் குறும்பனை நாடு ஒன்ருகும். சேரமன்னருக்குத் தாராக அமைந்தது பனந்தோடு. இத் தகைய பனைதரும் உணவுப்பண்டங்கள் பல. அவற்றுள் ''பனஅட்டு'' ஒன்று. பனம்பழச்சாற்றைப் பாயிற்பரப்பி வெய் யிலில் அட்டுப் பதப்படுத்தும் இவ்வுணவுப்பண்டத்தை இன் றும் ஈழத்தின் வடமாநிலமாகிய யாழ்ப்பாணப் பேச்சுத்தமிழில் ''பனுட்டு'' என்றே அழைக்கின்றனர். இத்தொன்மைத் தமிழ்ச் சொற்குத் தொல்காப்பியர்,

''பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் ருகும் ஐயென் உயிரே.
ஆகாரம் வருதல் ஆவாயி ஞன்'' (தொல்:எழு:284) என்று

புணர்ச்சிவிதி கூறுகிருர். JAFFNA CHOCOLATE என்று ஒரு சிலரால் செல்லமாக அழைக்கப்படும் இவ்வுணவுப் பண் டத்தைக் காலஞ்சென்ற ஈழத்து. நாவாலியூர், க. சோமசுந் தரப் புலவர் அவர்கள் (1880-1953). ''செங்கதிரோன் சுடும் இந்தப்பலகாரம்'' எனப் பாடினர். ''மன்னுநீர் ஞாலத்து

1. நாறற்பாக்குப் பதப்படுத்தும் முறையை எனக்கு அறியத் தந்தவர் யாழ்ப்பாணம், சிவதொண்டன் நிலையம் அ. செல்லத்துரை அவர்கள்.

வான்பணையின் மேன்மையெல்லாம் பன்னுகலிவெண்பாவாற் பாடிய'' அப்புலவரின் ''தால விலாசம்'' [2] என்ற நூலிலுள்ள பின்வரும் பாடற்பகுதி (114-170) பனுட்டின் வகைகளேயும் அவை செய்யும் முறைகளேயும் எடுத்துக் கூறுகிறது;—

'' . செல்வப் பனுட்டின் திறமுரைப்பேன்—மெல்லியலே
சுத்தத் தலத்திற் றுடையுயரப் பந்தரிட்டு
மெத்தச் சுசியாய் மெழுகியே—யத்திமுகத்
தைங்கரனைப் பூசனைசெய் தையா பனைப்படைப்பை
இங்கிதமாய்க் காப்பா யெனத்தொழுது—பங்கமின்றி
வெட்டிப் பழுத்தகனி வீழ்கனிக ளைக்கழுவித்
தட்டி நெகிழ்த்துரித்துத் தானடுக்கி—வட்டக்
கடகங் களிலிட்டுக் காடிவடித் தூற்றித்
திடமாகச் சேர்த்துப் பிசைந்து—கொடுமிடிமை
துன்று நலத்தைத் துருவி யுறப்பதுபோல்
ஒன்று களியை யுறந்தெடுத்து—நன்ருகப்
பின்னுமொரு கால்வேறு பெட்டியிலிட் டுப்பிசைந்து
மன்னுங் களிபிழிந்து வார்த்தொன்ருய்ச்—சொன்னபடி
கிஞ்ஞாச் செடியின் கிளைக்கூட்டி ஞற்றுழலி
யெஞ்சாது சூந்தை யெடுத்தெறிந்து—செஞ்செவே
முன்னஞ்செய் பந்தர் முழமா றிரண்டுடைய
பன்னஞ்செய் பாய்மேற் பரவியே—நன்னயமாய்
மாலே மடித்து வழிநாட் சுடர்தோன்றுங்
காலே விரித்துக் களிபரவி--மேலேவித
மெட்டு நாளெட்டுக் களிவிட் டிறுகியிறை
மட்டதா கத்தடித்து வந்ததற்பின்—னிட்டமுடன்
உப்புப் பிரண்டையிரண் டொக்கவதன் மேற்றூவித்
தப்பாமற் சாணுக்குச் சாண்கீறிச்—செப்பமிலாப்
புல்லர்பா லிச்சகம் பேசிப் பொருள்பெறல்போல்
வல்லமெல்லப் பாயிதழை வெட்டாமல்—நல்லகூர்த்
தட்டகப்பை யாற்புல்லுச் சத்தகத்தாற் றண்ணிரிற்
றெட்டெடுத்துச் சூரிய வெப்பத்தில்-வட்டக்
குடிலின்மேற் காயவைத்துக் கொண்டவிதழ் போக்கி

---

2. ''இலங்கை வளமும் தாலவிலாசமும்''—நவாலியூர், க. சோமசுந்தரப் புலவர், ஸ்ரீ சண்முகநாத அச்சகம், வண்ணர்பண்ணை, விரோதி ஆண்டு ஆவணித் திங்கள்.

வடிவாக நூல்போல் மடித்து—மிடிபோகப்
பின்னாக வுண்பதற்குப் பெய்துபொத்திக் கூடைதனிற்
பொன்னாக பேரணிற் போற்றிவைப்பார்—மின்னுசுடர்
மாணிழையாய் செல்வர் மனமாக வுண்கின்ற
பாணிப் பனாட்டின் பரிசுரைப்பேன்—பேணுபனங்
கட்டியு நெய்யுங் கலந்துகளி பாதியிறை
மட்டுந் தடித்திறுக வார்த்ததற்பின்—கெட்டியாய்
முன்போ லெடுத்து மடித்துமுடை கூடைசிலிட்
டன்பாக வுண்ப ரதுநிற்கப்—பின்புமொரு
பாக மூரைத்திடுவேன் பக்குவமாய்க் கேள்சிறுதுண்
டாகப் பனாட்டை யரிந்துகொண்டு—வேகவறுத்
திட்டிடித்த வெள்ளு மிளகரிசி சீரகமும்
அட்டெடுத்த பாணி யுடனளவி—முட்டியிலே
பெய்துவைத்துப் பின்பு பெருவிருந்தா யுண்பார்கள்
செய்தோற் பனாட்டின் திறமுரைப்பே—னெய்தும்
அமளிபோய் மாறி யருந்தலாய் வீழுங்
கமழுங் கனியின் களியை—யமைவுபெற
மூன்றிரண்டு நாள்வார்த்து முற்றாகக் காய்ந்ததற்பின்
ஏன்றதாள் போல வுரித்தெடுத்துத்—தோன்றுஞ்
சுருளாக்கிப் பச்சடியுந் தொட்டுண்பர் மேலும்
அருளாரு மைங்கரனை யுன்னி—மருவொடியல்
மாப்பிட்டு வாழை வருக்கைதே மாங்கனிகள்
வாய்ப்புற்ற புத்தமுதும் வைத்தேத்திக்—காப்பிட்டால்
வைத்த பனாட்டின் மருவு முழுப்புமுதல்
எத்தனையு முன மிசையயாவாம்—வைத்தெடுத்து
மாரிகா லத்தின் மருவுமுண வோடுண்ண
வீரியமாய் நோய்கள் விலகுவகேள்—சேரு
மலச்சிக்கல் போக்கு வயிற்றுளைவு மீன்முட்
குடர்ச்சிக்கல் கூட்டோடு போக்கு—நிலத்திலே.....''

இதனைப் படித்தால் பனாட்டின் இன்சுவையும் பிணிபோக்கும் தன்மையும், ஈழத் தமிழர்களிடையே இவ்வுணவுக்குள்ள செல் வாக்கும் புலனாகாமற் போகாது. இவ்வாறு ஈழத்தமிழ்ப்

---

3. ஒ. நோ. பரிபாடல். 4:33 பரிமேலழகர் உரை; திருக்கோவையார். 223 பேராசிரியர் உரை & நற்றிணை 96:1,3,6.

பேச்சு வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் "பஞட்டு" என்ற சொல் வாழ்ந்து வருகிறது:

அண்மைக்கும் சேய்மைக்கும் இடைப்பட்ட நடுவணதைச் சுட்டும் உகரச்சுட்டு இன்று யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழில் இடம் பெறுகிறது (3) உவன், உவள் (பரிபா 11 : 123), உவர், உது, (ஐங். 415:2; குறு. 81:5; புறம். 301 : 11), உந்த, உங்க (உங்கு-ஊங்கு:பரிபா. 4:5) ஆகிய வடிவங்களை அங்கு பேச்சுத் தமிழில் கேட்கலாம்.

திருக்கோணமலையும் மட்டக்களப்பும் ஈழத்தில் தமிழ்ப் பேசும் கிழக்கு மாநில நகரங்களாகும். திருக்கோணமலையில் "வயக்கெடுதல்" (வலிமை கெட்டு ஆள் இளைத்துப் போதல்; ஒ.நோ. வயம்-புறம் 11:10; பதிற்று. 75:2) என்பது போன்ற பழஞ்சொல்லாட்சிகளும், "ஊரால வருகிறேன்"; "வீட்டால வருகிறேன்" என்பன போன்ற மூன்றும் வேற்றுமைக் கருவிப் பொருளுடைய ஆல் உருபு ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் வருகிற வேற்றுமை மயக்கங்களும் சிறப்பாகக் காணப்படுகின்றன. (ஒ. நோ. "குன்றத்தால் கூடல் வரவு" — பரிபா. 8:28). பண்டைத் தமிழில் வரும் "கா" என்னும் அசைநிலை இடைச்சொல் (கலி. 99:9,12; தொல். சொல். 279), "என்ன கா சொல்லு? ஏங்கா நீவரவில்லை? எலக்கா இங்கே சத்துவந் திற்றுப் போ" என வருவதை மட்டக்களப்பில் இன்றும் பேச்சு வழக்கில் கேட்கிறோம். [4]

குமரிக் கண்டத்தின் ஒரு துண்டாக இலங்கும் ஈழம், பத்தினி வழிபாட்டைக் காத்து நிற்பது போலவே பழந்தமிழ்ச் சொல் மரபுகளையும் காத்து நிற்கிறது. அறிஞர்கள் இத்துறையில் போதிய கவனஞ் செலுத்தினுல் அரும்பெருஞ் செல்வங்கள் பல அகப்படும் என்பதில் ஐயமில்லை.

---

4. *"சோழமண்டலத்துத் தமிழும் ஈழமண்டலத்துத் தமிழும்" — விபுலானந்த அடிகளார், கலைமகள்: ஜனவரி, 1941.*

மொழியியல் கலைச்சொல் விளக்கம்-5

சு. இராசாராம், எம்.ஏ.,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

Language Universals — மொழிப் பொதுமைகள்: பத்தொன்பதாம் நூற்றாண்டில மொழியியலில் விளக்கமொழியியல் (Descriptive Linguistics) முக்கிய இடம வகித்தது. உலகிலுள்ள பலமொழிகள் இவ்விளக்க மொழியியலின் அடிப்படையில் ஆராயப்பட்டன குறிபபாக இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்திலுள்ள பல மொழிகள் ஆராயப்பட்டன. இவைகளுள் இலத்தீன், கிரேக்கம், சமஸ்கிருதம், ஆங்கிலம், ஜெர்மன், பிரஞ்சு ஆகியவை குறிப்பிடத்தக்கவை இம் மொழிகள் புற அமைப்பில் (Surface Structure) ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபாடு கொண்டிருந்த போதிலும் வரலாற்று அடிப்படையில் இம்மொழிகள் அனைத்தும் தொடர்புடைய மொழிகளாக இருக்கின்றன என்ற உண்மையை மொழி நூலறிஞர்கள் உணர்ந்தனர். மேலும் இவ்வனைத்து மொழிகளும் ஒரு மொழியையே பிறப்பிடமாகக் கொண்டு காலம், மக்கள் வாழ்ந்த நில அமைப்பு இவற்றின் காரணமாக ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபாடு கொண்டன என்றும் தெரிந்து கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மொழியியலில் முக்கியத்துவம் பெற்ற ஒப்புமை மொழியியல் (Comparative Linguistics) மொழிகளிடையே காணப்பட்ட ஒருமைப்பாடுகளை விளக்கியது. இவ்வொற்றுமைகளை அளவு கோலாகக் கொண்டு பல மொழிக் குடுமபங்களாக (Family of Language) மொழிகள் பாகுபடுத்தப்பட்டன, சில மொழிகளிடையே காணப்பட்ட நெருங்கிய தொடர்பே இப்பாகுபாட்டிற்கு முக்கிய ஆதாரமாக அமைந்தது இவ்வாறு மொழிகளிடையே காணப்பட்ட ஒற்றுமை வேற்றுமைகளை விளக்கி நின்றதோடு

சிலமொழி நிலைகளில் உலகிலுள்ள எல்லா மொழிகளும் ஒன்றாகவே இருக்கின்றன என்ற பேருண்மையையும் இவ் வாராய்ச்சி உணர்த்திற்று. எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு மொழிக்கென எழுதப்பட்ட இலக்கணம் அம்மொழி சார்ந்த மொழிக் குடும்பத்திலுள்ள மற்ற மொழிகளுக்கும் பொதுவாக அமைய வேண்டும் என்ற கருத்தையும தெளிவாக்கியது எடுத்துக் காட்டாக, திராவிட மொழிக் குடும்பத்தில பல மொழிகள் இருக்கின்றன. இம்மொழிகளுள் தமிழ்மொழிக் கென ஓர் இலக்கணம எழுதப்படடிருக்கின்றது என்று வைத்துக் கொளவோம். அது கன்னட மொழிக்கும, மலையாள மொழிக்கும் தெலுங்கு மொழிக்கும் பிற திராவிட மொழி களுக்கும் பொதுவான மொழியமைப்புகளுக்கு இலக்கணமாக அமைய வேண்டும். அதாவது, இலக்கணத்தில் விளக்கப் படுகின்ற ஓர் இலக்கணக் கூறு மொழியில் வந்து அமையு மாற்றில் ஓரளவிற்கு எல்லா மொழிகளும் ஒற்றுமை உடையன வாய் அமைதல் வேண்டும் என்பதாகும். ஒப்புமை மொழியியல மொழிகளிடையே இக்கருத்தையே வலியுறுத்தியது

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விளக்க மொழியியல் ஆராய்ச்சி வரலாற்றுத் தொடர்புடைய மொழி களோடு நில்லாது வேறுபல மொழிகளுக்கும் விரிவாக்கப் பட்டபோது சில உண்மைகள் தெளிவாயின. வரலாற்று அடிப்படையிலுள்ள மொழிகளைத் தவிர மற்றவை மொழிய மைப்புகளில ஒற்றுமை உடையனவாயில்லை என்ற உண்மை தெளிவாக்கப்பட்டது அத்தோடு ஒவ்வொரு மொழியும் அம்மொழிக்கே உரிய இயல்புகளோடு ஆராயப்பட வேண்டும. என்றும் விளக்கி வந்தனர்.

சுருங்கக் கூறின், விளக்க மொழியியல் ஆராய்ச்சியும் ஏனைய மொழியியல் ஆராயச்சிகளும் மனிதன் பேசும் ஒவ் வொரு மொழியும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபாடு உடையது என்ற உண்மையை உணர்த்திற்று. மொழியின்

புற அமைப்புகளில் அவை ஒன்றோடொன்று தொடர்புடையன அல்ல. என்றாலும் சிலமொழியமைப்புகளில் மொழிகளிடையே பல ஒற்றுமைகளைக் காண்கிறோம்.

மனிதன் மட்டுமே தன் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள மொழி என்ற கருவியைக் கையாளுகிறான். மனிதனின் இத்தனி இயல்பே மனித இனத்தை விலங்கினத்தினின்றும் வேறுபடுத்துகிறது எனபதை நாம் முன்னரே பார்த்தோம்.[1] மேலும் விலங்குகள் தம் கருத்தை வெளிப்படுத்தும் முறையிலும் மனிதன் எண்ணத்தை வெளிப்படுத்தும் வகையிலும் எவ்வளவோ வேறுபாடுகள் இருக்கின்றன. தேனீ தன் கருத்தைப் பிறதேனீக்களுக்கு நடனமாடி சில குறிப்பிட்ட சைகைகளின் மூலமாக வெளிப்படுத்துகிறது. இவ்வாறு மிருகங்களும், பறவைகளும், நீர்வாழ் உயிரினங்களும் தத்தமக்கே உரிய வகையில் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கின்றன. ஆனால், மனிதன் உச்சரிக்கின்ற ஒலிகளைப்போல் அவைகளால் ஒலிக்க இயலுவதில்லை. அவற்றின ஒலியுறுப்புக்கள் மனித ஒலியுறுப்புக்களின் அமைப்புபோல் அன்று என்பதே முக்கிய காரணம் ஆகும் மனித உடலின் அமைப்பின் அடிப்படையில் சில ஒலிக்கூறுகள் பொதுவாகவே அமைந்து இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, மூக்கொலிகளைக் (Nasal sounds) கூறலாம். எல்லா மொழிகளிலும் எல்லா ஒலிகளும் காணப்படுவதில்லை தமிழ் மொழியில் காணப்படும் சிறப்பொலியான 'ழ'கரமும், வல்லின மெய்யொலியான 'ற'கரமும் இன்றைய திராவிடமொழிகளான தெலுங்கு, கன்னடம், துளு போன்ற மொழிகளில் இல்லை ஆனால் எல்லாவகையான மூக்கொலிகளும் திராவிடமொழி

---

1. It is languag, more obviously than anythig else, that distinguishes man from the rest of the animal world. The Flux of Language, Charles Barber, George Allen and Unuien Ltd , London, 1964. PP. 1.

மட்டுமன்றி உலகிலுள்ள எல்லா மொழிகளிலும் வந்து வழங்கு மாற்றை நாம் காண்கிறோம். இது மனித உடலின் அமைப் பின்பாற்பட்டது. நுரையீரலிலிருந்து உருவாகும் மூச்சு வாயுறுப்புகளை ஒலிக்கப்படுகின்றன ஒலிகளுக்கேற்ப வருடி மூக்குத்துவாரம் வழியாக வெளிவரும்போது இம்மூக்கொலி கள் பிறக்கின்றன.

ஒலிகளிடையே காணப்படும் பொதுவியல்புகளை (Common Structures) விடுத்து இலக்கணக் கூறுகளிடையே காணப்படும் பொதுவியல்புகளை நோக்கின் சில உண்மைகள் தெளிவாகும் ஒரு மொழிக்கு இலக்கணம் எழுதுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அம்மொழிக்கே உரித்தான சிறப்பியல்புகள் எத்தனையோ இருக்கலாம். இருந்தபோதிலும் எல்லா மொழிகளுக்குமுள்ள சில பொதுவியல்புகளுள் இம் மொழிக்கும் தகுந்த அளவில் பங்கு இருக்கும் என்பதை மறுக்க முடியாது. எனவே, ஒரு குறிப்பிட்ட மொழிக்கென எழுதப்படும் ஓர் இலக்கணம் சிறப்பியல்புகளை விளக்குவதோடு பொதுவியல்புகளையும் தெளிவாகக் காட்ட வேண்டும். இவ் வகை இலக்கணத்தையே சிறந்த இலக்கணம் என்று கூற முடியும். இவ்வகை இலக்கணங்களே உலக மொழிக்கெல் லாம் உள்ள பொதுவியல்புகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட மொழி எவ்வாறு சில சிறப்பியல்புகளைப் பெற்று வேறுபடுகிறது என்பதைக்காட்ட இயலும். எடுத்துக்காட்டாக, எழுத்தியலை இலக்கணத்தில் எழுதும்போது எல்லாமொழி இலக்கணங் களும அகரத்தையே ஆதியாகக் கொண்டு தொடங்குவதைக் கூறலாம். சொற்றொடர் எழுவாயும் பயனிலையும கொண்ட சிறு வாக்கியங்களால் தொடரியலில் (Syntax) தொடர்வதை யும் உதாரணமாகக் கொள்ளலாம். இலக்கணத்தின் இத் தகைய அடிப்படைக் கூறுகள் எல்லா மொழிகளுக்குமுள்ள பொதுவியல்புகளே எனலாம்.

எல்லா மொழிகளுக்கும் பொருந்தி வருகின்ற சில பொதுவான இயல்புகள் மொழிகளிடையே காணப்படுகின்றன

என்ற கருத்தை ஒத்துக்கொண்டால் ஒரு மொழியை அன்னிய மொழியாகப் படிக்கும்போதும் குழந்தையின் மொழி வளர்ச்சியிலும் (Language Acquisition) சில ஒற்றுமைகள் இருக்க வேண்டும். ஒரு மொழியை அன்னிய மொழியாகப் படிக்கின்ற ஒருவருக்கு சில மொழியமைப்புகள் எளிதாக அமைய வேண்டும். அவ்வாறு எளிதாக அமைகின்றனவா, குழந்தையின் மொழி வளர்ச்சியில் இப்பொதுவியல்புகளின் பங்கென்ன என்பதை விரிவாகக் காணலாம்.

தாய்மொழி அல்லாத ஓர் அன்னிய மொழியை கேட்கும்போதோ அல்லது கற்கும்போதோ அம்மொழியின் சில மொழியமைப்புகள் முன்னரே நன்கு அறிமுகமானவைகளாக உள்ளதே தோன்றுவது இயற்கை. சில மொழிகள் தாய்மொழியோடு மிகவும் நெருங்கிய தொடர்பு உடையனவாகத் தோன்றும். சில ஏதோ சில மொழி நிலைகளில் மாத்திரமே தொடர்புடையனவாகத் தோன்றி மற்ற மொழி நிலைகளில் (Levels) வேறுபாடு உடையனவாக இருப்பதை உணரலாம். அன்னிய மொழியின் மொழியமைப்புகளுக்கும் தாய்மொழியின் மொழியமைப்புகளுக்கும் இடையே உள்ள இடைவெளி சுருங்கி ஒன்றின் அமைப்பு மற்றொன்றின் அமைப்போடு எல்லா மொழி நிலைகளிலும் நெருக்கம் ஆகும்போது 'இந்தமொழி என் தாய்மொழியைப் போலவே இருக்கிறது' என்று சொல்லி விடுகிறோம். எடுத்துக் காட்டாக, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள ஒருவர்க்கு மலையாள மொழியையும், கன்னட மொழியையும், தெலுங்கு மொழியையும் எளிதாகப் புரிந்து கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் முடிகிறது. மாறாக, ஆங்கில மொழியைக் கற்கும்போது அவ்வளவு எளிதாக இருப்பதில்லை. ஆனால் பிரெஞ்சு மொழியைவிட ஆங்கிலம் எளிதாகப் புரிவதாக ஒரு பிரமை நம்முள் இருப்பதை உணர்கிறோம். இவ்வுணர்வு எல்லா மொழிகளுக்கும் பொதுவான சில இயல்புகள் இயற்கையில் அமைந்து வந்திருக்கின்றன; இப்பொதுவியல்புகளே

இத்தகைய உணர்விற்குக் காரணம் என்ற முடிவுக்கு நம்மை வரத்தூண்டுகிறது.

குழந்தையின் மொழி வளர்ச்சியில் இப்போதுவியல்புகளின் பங்கு முக்கியமானதாகும். குழந்தை எவ்வாறு மொழியைக் கற்றுக்கொள்கிறது என்பது இன்னும் புதிராகவே இருக்கிறது. மொழி நூலறிஞரும் உளவியலறிஞரும் இதன் பொருட்டு நடத்தி வருகின்ற ஆராய்ச்சிகள் பலவாயினும் இன்னும் முடிந்த முடிபாக எந்த கருத்தையும் தெளிவாக்க முடியவில்லை என்றே கூற வேண்டும்.

குழந்தையின் மொழி வளர்ச்சியைப் பற்றிய இருவேறுபட்ட கருத்துக்கள் பரவலாக இருந்து வருகின்றன என்பதை அறிவோம். குழந்தைக்கு மொழி இயற்கையாகவே கைவரப் பெறுகிறது என்று பகுத்தறிவுவாதிகள் (Rationalists) நம்புகின்றனர். எந்த மொழியும் மனித உள்ளத்தில் இயல்பாகவே உருவாகமுடியாது; மொழி என்பது அனுபவத்தால் மாத்திரமே கற்றுக் கொள்ளக்கூடிய புறச்செயலாகும் என்று பகுத்தறிவு கொள்கைக்கு எதிர்வாதம் செய்கின்றனர். உலகாயுதவாதிகள் (Empioicists). இவ்விரு கருத்துக்களில் பகுத்தறிவுவாதிகளின் கருத்தை மேலும் ஆராய முற்படுவோமேயானுல் மொழியைப் பற்றிய சில பொதுவான உண்மைகள் புலப்படும்.

குழந்தைக்கு மொழி இயல்பாகவே கைவரப்பெறுகிறது என்ற கருத்தை எடுத்துக் கொண்டால் உலகிலுள்ள எல்லா குழந்தைகளுக்கும் அடிப்படையாக - பொதுவாக அமைகின்ற சில மொழியமைப்புகள் இருக்க வேண்டும். அம்மொழியமைப்புகள் நாடு, இனம், பண்பாடு என்பனவற்றைக் கடந்து 'மொழி' என்பதன் பொதுக் கொள்கைகளாகப் பொருந்துதல் வேண்டும். இப்பொதுவியல்புகள் குழந்தையின் உள்ளத்தில் எந்த மொழியையும் கற்றுக் கொள்ள இயலுகிற பொது விதிகளாக இயற்கையாகவே அமைந்திருக்கின்றன என்று விளக்கிக் கூறலாம். இப்பொது விதிகளின் உதவியால்

குழந்தை தனக்கென ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்து எளிதாகக் கற்றுக் கொள்கிறது. இவ்வாறு கூறும்போது குழந்தை தன்னைச் சுற்றியுள்ளோர் பேசும் சொற்களையும் அவை சொற்றொடரின் அமையுமாற்றையும் உன்னிப்பாக கவனித்து ஒலிகளையும் சொற்றொடர்களையும் கற்றுக் கொள் கிறது என்ற கருத்து - கோட்பாடு இக்கருத்திற்கு முரண்பட்ட தாகத் தோன்றுகிறது. இது உண்மை. குழந்தை சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் வழங்கும் மொழியின் ஒலிகளையோ அல்லது சொற்றொடர்களையோ அப்படியே மனத்தில் பதியச்செய்து தகுந்த சூழ்நிலை வரும்போது திரும்ப சொல்கிறது என்பது விஞ்ஞான நோக்கில் அமையாத ஒரு கற்பனை எனலாம். ஒலி களையும், சொற்களையும் சொற்றொடர்களையும் மற்றவர்களைப் போல் தகுந்த சூழ்நிலை வரும்போது குழந்தைபாவனை (Imitate) செய்கிறது என்பதைவிட மொழியில் ஒலிகள் வந்து வழங்கும் விதிகளையும் (Rules), சொற்களும் சொற்றொடர்களும் அமை யும் இலக்கண விதிகளையுமே (Grammatical Rules) குழந்தை ஆழமாகக் கற்றுக் கொள்கிறது. அதனால்தான் மற்றொரு சூழ்நிலையில் மாறுபட்ட சொற்களை ஒரேவிதியில் அடங்குமாறு புதிய வாக்கியங்களைக் குழந்தையால் படைக்க முடிகிறது. எனவே, குழந்தை பாவனைமூலம் மட்டுமே மொழியை தன்னுள் வளர்த்துக் கொள்கிறது என்பது தவறானது. மொழியில் காணப்படும் இத்தகைய விதிகளே குழந்தையின் மொழி வளர்ச்சிக்கு இன்றியமையாதது என்பது தெளிவு. மேலும், இவ்விதிகள் எல்லா மொழிகளுக்கும் — சில மொழியமைப்பு களைத்தவிர — பொது விதிகளாக இருக்கின்றன என்று இன்றைய உளவியல் மொழி நூலறிஞர் (Psycholinguists) நம்பு கின்றனர்.

ஒரு சில மொழிகளை நுணுகி ஆராய்ந்த ஒரு மொழி நூலறிஞரை எடுத்துக் கொள்வோம். புதிதாக இன்னொரு மொழியை ஆராய்வதற்காக அவர் அணுகும்போது முற்றிலும் புதிதாக ஒரு மொழியை ஆராய்கின்ற உணர்வு அவர்க்கு

ஏற்படுவதில்லை. எத்தனையோ மொழியமைப்புகள் முந்திய மொழியமைப்புகளோடு தொடர்புடையனவாக இருப்பதால் அவருடைய ஆராய்ச்சியில் புதுமைகள் இருப்பதில்லை. இருந்தாலும் சில மொழியமைப்புகள் முற்றிலும் மாறுபட்டவைகளாகத் தோன்றும்போது மொழி நூழறிஞர்க்கு புதிதாக ஒன்றைக் கண்டு பிடித்துவிட்ட உணர்வு ஏற்பகிறது.

இவ்வாறு மொழி இயற்கையாகவே குழந்தைக்கு கைவரப் பெறுவதும், ஒரு மொழியை அன்னிய மொழியாகப் பயிலும்போது சில மொழியமைப்புகள் எளிதாக இருப்பதும், மொழி நூலறிஞருக்கு எல்லா மொழிகளும் ஒன்றிற்கொன்று தொர்புடையனவாகத் தோன்றுவதும் மொழிகளிடையே காணப்படும் பொதுவியல்புகளால் மட்டுமே யாகும் எனலாம். இப்பொதுவியல்புகளையே நாம் 'மொழிப் பொதுமைகள்' (Language Universals) என்று கூறுகிறோம்.

இம்மொழிப் பொதுமைகளை எவரும் மறுப்பதற்கில்லை. அவ்வாறேனில் உலகிலுள்ள எல்லா மொழிகளும் பொதுவாக ஒரு மொழியையேப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தனவா என்ற கேள்வி எழுகிறது. இக்கேள்விக்கு இதுகாரும் யாரும் தெளிவான பதிலைக் கூறியதாகத் தெரியவில்லை. ஏனெனில் இவ்வினா மொழித்தோற்றத்தைப் (Origin of Language) பற்றிய ஆராய்ச்சிக்கே மீண்டும் இழுத்துச் செல்கிறது. மொழித் தோற்றம் பற்றிய எல்லா கோட்பாடுகளும் கற்பனைக் கதைகளே என்ற மொழி நூலறிஞரின் துணிபிற்கு சவாலாக இவ்வாராய்ச்சியைத் தொடர எந்த மொழி நூலறிஞருக்கும் துணிவில்லை. இது ஒரு புறம் இருக்க மொழித் தோற்றம் பற்றிய மொழி நூலறிஞரின் கருத்தே முடிந்தமுடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதும் இவ்வாராய்ச்சியை மேற்கொள்வாரின்றி ஆக்கிற்று எனலாம்.

இவ்வாராய்ச்சியை விடுத்து மொழி என்பது மனித மனத்திலே இயல்பாக உருவாகுவது என்பதை ஒப்புக்கொண்

டால் இம்மொழிப் பொதுமைகளும் இயல்பாகவே அமைவன என்று கூறமுடியும் எனவே, மொழிப் பொதுமைகள் பிறப்பில் மனிதனுக்கே உரிய சில உடலியல் கூறுகள்போல மனத்திலே இயற்கையாகவே உருவாகுவது. இப்பொதுவியல்புகளின் மூலமாகப் பல மொழிகளிடையே ஒன்றைக் குழந்தை தேர்ந்து எடுத்துக் கொள்கிறது. இம்மொழிப் பொதுமைகளேயும் இவற்றிடையே பலமொழிகள் குழந்தையைச் சுற்றி பேசப்படுவதையும் கீழே உள்ள படம் காட்டுகிறது.



மேற்காட்டிய படத்தில் உள்ள அழுத்தமான கோடுகள் மொழிப் பொதுமைகளேயும், புள்ளிக் கோடுகள் பலமொழிகளேயும் காட்டுகின்றன.

மொழிகளிடையே பொதுவியல்புகளாக – மொழிப் பொதுமைகளாகப் பல கூறுகள் எல்லா மொழி நிலேகளிலும் (Levels) காணப்படுகின்றன. மொழிகளில் ஒலிகள் வந்து வழங்கும் நிலேயையும் (Phonological Level) சொற்றொடரில் சொற்கள் வந்து அமையுமாற்றையும் (Syntactic leval) சொற்களுக்குப் பொருள் வந்து பொருந்துமாற்றையும் (Semantlc

---

A structural feature that is common to all Languages is called a language Universal, Language and its Structure. Ronald W. Langacker, Harcourt, Braceand World, Inc, New York, 1967.

Lovel) எடுத்துக் காட்டுகளாகக் கொள்ளலாம். சொற்றொடரில் சொற்கள் அமையுமாற்றை எடுத்துக் கொள்வோம்.

ஒவ்வொரு மொழியிலும் சொல்வரிசை (Word order) என்பது அம்மொழிக்கே உரிய தனியியல்பு எனலாம். தமிழ் மொழியிலுள்ள ஒரு சொற்றொடரை எடுத்துக் கொள்வோம்.

அவன் அழகான பையன்

இதற்கு சமமான ஆங்கில மொழிப் பெயர்ப்பையும் பார்ப்போம்

He is a beautiful boy

'அவன் அழகான பையன்' என்ற தமிழ் சொற்றொடரை 'அழகான பையன் அவன்' என்று கூறினாலும் பொருள் சிதைவின்றி இலக்கணப் பிழையின்றி தனித்து நிற்கிறது. ஆனால் 'Beautiful boy he is a' என்று ஆங்கில சொற்றொடரை மாற்றும்போது பொருளின்றி இலக்கணப் பிழையுடையதாகி விடுகிறது. இது ஒவ்வொரு மொழிக்கென ஒரு 'சொல் வரிசை' இருக்கிறது என்ற உண்மையைத் தெளிவாக்குகிறது. ஆனால், உலகிலுள்ள எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் பொதுவியல்பாக--மொழிப் பொதுமையாக சொலவரிசையைப் பொறுத்த வரையில் ஒன்றைக் கூறலாம். ஒவ்வொரு மொழியிலும் சொற்றொடரில் சொல்வரிசை எவ்வாறு அமைந்திருப்பினும் அப்படியே இடமாற்றுவது இயலாது என்பதை மொழிப் பொதுமை என்று கூறலாம், அதாவது 'பையன் அழகான அவன்' என்று தமிழ் சொற்றொடரையும் 'Boy beautlful a is he என்று ஆங்கில சொற்றொடரையும் மாற்றும்போது பொருள் அற்றவையாகி விடுகின்றன. எனவே, மொழியின் சொல் வரிசையைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மொழிக்கே உரிய முறையில் சொல்வரிசை அமைந்திருந்தாலும் எல்லா மொழிகளுக்கும் பொதுவியல்பாக சில அமைந்திருக்கின்றன என்பது தெளிவு.

முன்னர்க் குறிப்பிட்டபடி மொழி இயற்கையாகவே குழந்தைக்கு கைவரப் பெறுகிறது என்ற கருத்திற்கு மொழிப் பொதுமைகள் சிறந்த சான்றுகளாகும். இக்கருத்தை ஒத்துக் கொள்ளும்போது நம்மனத்திலே சில கேள்விகள் பிறக்கின்றன மொழியமைப்புகளுள் எந்த மொழியமைப்புகள் குழந்தையின் மொழி வளர்ச்சியில் இயல்பாக அமைகின்றன? எந்த மொழி யமைப்புகள் அனுபவத்தால் அறியப்படுகின்றன? இவை எல்லாவற்றிற்கும் மேலாக குழந்தை இவற்றை எவ்வாறு கற்றுக் கொள்கிறது என்பதும், எந்த வயதில் கற்கிறது என்பதும் இன்னும் பதில் தெரியாத புதிர்களாகவே இருக் கின்றன. மொழி நூலறிஞரும் உளவியல் அறிஞரும் ஒன்று பட்டு மொழியை அணுகி ஆராய்ந்தால்தான் இக்கேள்வி களுக்குப் பதில் கிடைக்கும்.

திராவிடமொழிகளில்...... தொடர்ச்சி

— இரா. கோ. —

செய்து வாய்பாட்டு வினைகள் தொடக்கத்தில் *செய்-உம்-பு என்ற அமைப்பினவாக நிகழ்ந்து முற்றுப் பொருண்மையை உணர்த்தி, பின்னர் தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் எச்சப் பொருண்மையையும், தெலுங்கில் ஏவற்பொருண்மையையும் உணர்த்திய செய்திகள் மேலே குறிக்கப்பெற்றன. *செய்-உம்-பு என்ற வாய்பாட்டு அமைப்புக்கு இணையாகச் *செய்-உம்-து என்ற வாய்பாட்டு அமைப்பு வினைகளும் மூலமொழியில் இருந்தனவாகத் துணியலாம். *செய்-உம்-து என்ற வாய்பாட்டு அமைப்பினவாகிய வினைமுற்றுக்கள் புறநானூற்றில் பரவலாகவும், மலையாளத்தில் மலிந்தும் காணப்படுகின்றன.

பாயுந்து (பாய்-உம்-து புறம் 24.3,16)
வழங்குந்து (வழங்கு-உம்-து ௸ 396.1)
வைகுந்து (வைகு-உம்-து ௸ 384.9)
பெயர்க்குந்து (பெயர்க்கு-உம்-து ௸ 395.11)
மறுக்குந்து (மறுக்கு-உம்-து ௸ 343 2)
நிலைக்குந்து (நிலைக்கு-உம்-து ௸ 386.15)
பறிக்குந்து (பறிக்கு-உம்-து ௸ 339 3,352.4)
பூக்குந்து (பூக்கு-உம்-து ௸ 137.8,396.2)

செய்து வாய்பாட்டில் அடங்கும் இவ்வினைகளை **செய்யுந்து** (செய்-உம்-து) வாய்பாட்டு வடிவினவாகக் கொள்ளலாம். இச்செய்யுந்து வாய்பாட்டு வினைகள் துகரக்கிளவியின்முன் அமைந்த மெல்லொற்று பேச்சுத்தமிழில் நிகழ்வுப் பொருண்மையை உணர்த்தும் **செய்யுது** வாய்பாட்டு வினைகளாகவும், உகரம் ஊர்ந்த தகரம் நகரமாகத் திரிந்து மலையாளத்தில் அதேகாலப் பொருண்மையை உணர்த்தும் **செய்யுந்து** வாய்பாட்டு வினைகளாகவும் அமைந்தன.

செய்யுந்து வாய்பாட்டு வடிவினவாகிய வினைகளின் ஈற்றில் மிகுந்து நிற்கும் நகரமெல்லொலி ஓரொலியாக ஒடுங்கி னகர ஒலிப்பைப் பெற்றுத் தெலுங்கில் **செய்யுனு** வாய்பாட்டு வினைகளாக வழங்கத் தொடங்கின[1]. (எ-டு) **சேசுனு** (ce:sunu) 'செய்யும்', தெலுசுனு (telusunu) 'தெரியும்', நடுசுனு (naducunu) 'நடக்கும்'. செய்-உம்-பு வாய்பாட்டு அமைப்பினவாகிய செய்பு வாய்பாட்டு வினைகளும், செய்-உம்-து வாய்பாட்டு அமைப்பினவாகிய செய்து வாய்பாட்டு வினைகளும், மூல மொழியில் பயின்று வழங்கியது போலவே செய்-உம்-கு வாய்பாட்டு அமைப்பினவாகிய செய்குவாய்பாட்டு வினைகளும் மூலமொழியில் வழங்கினவாகக் கருதலாம்.

தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளில் உகரம் ஊர்ந்த பகரம் வகரமாகத் திரிந்தும் திரியாமலும் அமையும் சொற்கள், தெலுங்கில் உகரம் ஊர்ந்த மகர ஈற்றனவாக அமைகின்றன. முந்திய (1–20) எடுத்துக் காட்டுக்களைக் கருத்தில் கொண்டு இத்தகைய சொற்களின் தொன்மை வடிவங்களை (தொ வ) எளிதில் பின்வருமாறு உருவமைக்கலாம்.

கன். அதுபு [adubu] தெ. அதுமு [DED 114]
தொ. வ. *அதும்பு

த. கதுவு. கன். கதுபு [kadubu], தெ. கதுமு
[DED 1008] தொ. வ. *கதும்பு

கன். துடுபு [tudubu], தெ துடுமு [tudumu],
[DED 2699] தொ. வ. *துடும்பு

---

1. **செய்யுந்து** *வாய்பாட்டு வினைகள் தமிழில் மேலும் வினைமுற்று விகுதிகளை ஏற்கத் தொடங்கிய நிலையில் அவ்வாய்பாட்டு வினைகளில் மிகுந்து நின்ற நகரம் ஒடுங்கி நின்றது. அவ்வாறு ஒடுங்கிய நகரம் தெலுங்கில் னகரத்தின் ஒலிப்பைப்பெற்று நிற்க, தமிழில் நகரமாக நிலைபெற்று விட்டது. இந்நிலையைச்* **செய்யுநன்** *(செய்யுநு-அன்)* **செய்யுநுள்** *(செய்யுநு-அள்),* **செய்யுநர்** *(செய்யுநு-அர்),* **செய்யுந** *(செய்யுநு-அ),* **செய்யுநை** *(செய்யுநு-ஐ) போன்ற வாய்பாட்டு வினைப்பெயர்களில் காணலாப்.*

த. நடுவு. கன். நடுவு தெ. நடுமு. பர்ஜி நடுப் [nadub] DED 2959] தொ. வ. *நடும்பு

கன். கீபு [gi:bu] 'வீடு, இருப்பிடம்' தெ கீமு [gi:mu] [DED 1342] தொ. வ. *கீம்பு

த. அளவு, அளாவு. கன். அளவு. துளு. அலமுனி

தெ. அலமு [DED 253] தொ. வ. *அளம்பு *அளாம்பு, *அலம்பு-

த. கூவு. தொதுவம் குப் [kub]. தொ. வ. *கூம்பு, *கும்பு.

பொதுவாக மகரம் வீழ்ந்த நிலையில் உயிர்களிடையே தனித்து நிற்கும் பகரம் வகரமாகத் திரிந்தும் திரியாமலும் அமையும் பான்மை தமிழ், கன்னடம் ஆகிய மொழிகளுக்கும் மொழியீற்றில் நிகழும் -ம்பு என்னும் ஒலித்தொடர் உகரம் ஊர்ந்த மகரமாகத் திரிந்து நிற்கும் பான்மை தெலுங்கு போன்ற மொழிகளுக்கும் உரியனவாகத் தோன்றினாலும், முன்னதன்பான்மை பின்னதிலும், பின்னதன்பான்மை முன்னதிலும் தடுமாறி நிற்றலும் உண்டு. எடுத்துக் காட்டாக, **குழுமு** என்னும் சொல் தெலுங்கில் அமையாமல் தமிழிலும், **துறுமு. உறுமு**, ஆகிய சொற்கள் தமிழ் தெலுங்கு இரு மொழிகளிலும், ஒரு வகைக்களையைக் குறிக்கும் **ஓமு** என்னும் சொல் தெலுங்கில் அமையாமல் கன்னடத்திலும், கலத்தல் என்னும் பொருளைக் குறிக்கும் **கலமு** என்னும் சொல் தெலுங்கில் அமையாமல் துளுவிலுமாக நிகழ்கின்றன. இங்ஙனம் ஒன்றின் பான்மை பிறிதொன்றில் நிகழ்வதற்கு மூன்று காரணங்களை எண்ணிப் பார்க்கலாம். 1) உகரம் ஊர்ந்த மகர ஈற்றுச் சொற்களைத் தெலுங்கிலிருந்து பிறதிராவிட மொழிகள் பெற்றிருக்கக்கூடும் 2) மூலமொழியிலேயே -ம்பு > மு என்னும் மாறுதல் நிகழ்ந்து தெலுங்கு போன்ற மொழிகள் அம்மாறுதலை பெரிய அளவிலும், தமிழ், கன்னடம், துளு போன்ற மொழிகள் சிறிய அளவிலுமாக ஏற்றுக் கொண்டிருக்கக்கூடும். 3) தமிழ் கன்னடம், துளு ஆகிய மொழிகள் தனி மொழிகளாகக்

கிளைத்த பின்னர் சிலசொற்களில் —ம்பு > மு என்னும் மாறுதல் ஒரோவழி நிகழ்ந்திருக்கக்கூடும். இவ்வாறு அமைந்த சொற்களின் தொன்மை வடிவங்களை உருவமைப்பதில் மேற்குறித்த எக்காரணமும் தடையாக அமையப் போவதில்லையாதலால் அத்தகைய சொற்களையும் பின் வருமாறு உருவமைக்கலாம்.

த. (சீவு). கன். கீவு, கீமு. தெ. சீமு [DED 1337]
தொ. வ. *கீம்பு

கன். ஓவு. ஓமு [DED 890] தொ. வ *ஓம்பு

த. கலவு. துளு. கலமு (DED 1092). தொ. வ *கலம்பு

த. தடவு. கன். தடவு தெ. தடவு. தடமு [DED 2454]
தொ. வ. *தடம்பு

த. கெழுவு. கெழுமு [DED 1647] தொ. வ. *கெழும்பு

த. கழுமு [DED 1153] தொ. வ. * கழும்பு.

மகர மெல்லொலி வீழ்ந்து பட்ட நிலையில் உயிர்களிடையில் தனித்து நிகழும் அலையொலியாகிய பகரம் கன்னடத்தில் மிகுந்து நிற்கும் நிலையும் காணப்படுகிறது. இத்தகைய மிகுதிப்பேறு பகரத்தின் முன் நிகழும் உயிர்கெடுவதால் நிகழ்கின்றது. இங்ஙனம் உயிர்கெடும்போது பகரத்தின் முன் நிகழும் மெய்யொலியாகிய ரகரத்தைப் பகரம் தனக்கு இனமாக்கிக் கொள்கின்றது. இதுவே பகரம் மிகுந்து நிற்பதற்குக் காரணமாகின்றது. இத்தகைய சொற்களும் அவற்றின் மூல வடிவங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

கன். எப்பு [ebbu], எர்பு [erbu], த. எழும்பு [DED 723] தொ. வ. *எரும்பு (> *எருபு [erubu] > எர்பு [erbu] < எப்பு [ebbu].

கன். கப்பு [kabbu], கர்பு karbu], கர்வு. த. கரும்பு [DED 1083] தொ. வ. *கரும்பு (> *கருபு [karubu] > கர்பு [karbu] > கப்பு [kabbu])

கன். கொப்பு [kobbu], கொர்பு [korbu], கொர்வு. துளு. கொம்மெ [DED 1784] தொ. வ. *கொரும்பு

[> *கொருபு [korubu] > கொர்பு [korbu] > கொப்பு [kobbu], *கொருபு [korubu] > *கொருவு > கொர்வு.

கன் பர்பு [parbu], பர்வு, ஹப்பு [habbu]. த. பரம்பு [DED 3255] தொ. வ. * பரம்பு /?* பரும்பு [> * பரபு [parabu] /?* பருபு [parubu] > பர்பு [parbu] > ஹப்பு [habbu]; *பரபு /?* பருபு > பரவு /? பருவு > பர்வு].

கன். தப்பு [tabbu]. தர்பு [tarbu] 'தழுவு' [DED 2543] தொ. வ. * தரும்பு (?) [>* தருபு [tarubu] > தர்பு [tarbu] > தர்பு [tarbu] > தப்பு [tabbu].

கன். உப்பு [ubbu], உர்பு [urbu] [DED 573]. தொ. வ. * உரும்பு (?) [> உருபு [urubu] > உர்பு [urbu] > உப்பு [ubbu]).

கன் மப்பு [mabbu], மர்பு [marba]. தெ. மப்பு [mabbu] [DED 3849]. தொ.வ. *மரும்பு (?) [>*மருபு (marubu] > மர்பு [marbu] > மப்பு [mabbu]).

உகரம் ஊர்ந்த பகரத்தின் முன் நிகழும் மகரம் வீழ்ந்து படாமல் அஃகியொலித் தன்மையுள்ள பகரமாகத்திரியும் தெலுங்கில் காணப்படுகின்றது. இத்தகைய சொற்களில் பொதுவாக முதலசையில் உள்ள உயிர் கெட்டு நிற்கின்றது.

தெ. ம்ரப்பு (mrabbu) 'வானம்'. கன். மர்பு (marbu) (DED 3849) தொ வ. * மரம்பு (>*ம்ரம்பு > ம்ரப்பு (mrabbu)

தெ. ப்ரப்பு(prabbu) 'பெருகுதல்'. கன், பர்பு(parbu). தமிழ் பரம்பு. (DED 3255) தொ. வ. * பரம்பு (>* ப்ரம்பு) ப்ரப்பு (Prabbu)

தெ, கன். ருப்பு (rubbu) மலையாளம் உரும்மு- (DED 572) தொ. வ. * உரும்பு (>* ருப்பு >,(rubbu)

தெலுங்கில் மென்றொடர்ப் புகர ஈற்றுச் சொற்களில் நிகழும் பகரம் மகரமாகத்திரியும் நிலை முன்னர்க் குறிக்கப் பெற்றது. (எ-டு. நம்பு > நம்மு; கொம்பு > கொம்மு). தமிழில் காணப்படும் **வெம்மை, அம்மை, இம்மை** போன்ற சொற் களின் பகுதிகளாகிய **வெம்மு – அம்மு – இம்மு** – ஆகிய வற்றை முறையே * **வெம்பு**– * **அம்பு** - * **இம்பு** – ஆகியவற்றின் திரிபுகளாகக் கருதலாம். **அம்மா** (< * அம்மாய் > * அம்மு –ஆய்) என்னும் சொல் * **அம்பு** – என்னும் பகுதியின் அடி யாகத் தோன்றியதாகத் துணியலாம்.

புகர ஈற்று மென் டொடர்ச்சொற்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் உற்ற மாறுதல்களைக் கருத்தில் கொண்டு, உகரம் ஊர்ந்து நிற்கும் பகர வகர மகர ஈற்றுச் சொற்களைப் புகர ஈற்றுமென்றொடர்ச் சொற்களாக உரு வமைக்கலாம். எடுத்துக்காட்டாக கன்னடத்தில் காணப்படும். **அறுபு** (DED 346) என்னும் சொல்லுக்கு நிகராக **அறுமு** என் னும் சொல் தெலுங்கில் காணப்படவில்லை யென்றாலும் அதனை * **அறும்பு** என உருவமைக்கலாம். **எறுபு** (DED 696) என் னும் கன்னடச் சொல் தமிழில் **எருவு** எனத்திரிந்து நிற்கிறது. ஆனால் இதற்கு நிகராகத் தெலுங்கில் **எருமு** என்னும் சொல் காணப்படவில்லை. ஆயிம் **எருபு, எருவு** ஆகியவற்றை * **எறும்பு** என உருவமைக்கலாம்.

புகர ஈற்றனவாய **தொடர்பு, மார்பு, மரபு, சால்பு** போன்ற சொற்களையும். உகரம் ஊர்ந்த வகர ஈற்றனவாய **நிலவு, கனவு, இரவு, களவு, உழவு**, போன்ற சொற்களையும் மென்றொடர்ப்புகர ஈற்றுச் சொற்களாக உருவமைக்கலாம். இத்தகைய சொற்களை உருவமைக்கும்போது சில இடர்ப்பாடு களையும் கருத்தில் கொள்ளவேண்டும். மெல்லொலியின்றி நிகழும் புகர ஈற்றுச் சொற்கள் மற்றும் உகரம் ஊர்ந்த வகர ஈற்றுச் சொற்கள் எல்லாவற்றையுமே மென்றொடர்ப்புகர ஈற்றுச் சொற்களாக உருவமைக்க இயலுமா என்பது ஐயத்திற்

குரியதாகும். புகரக்கிழவியின்முன் நிகழும் மகரமெல்லொலி வீழ்ச்சியுற்ற நிலை காலப் போக்கில் மறக்கப்பெற்று, உகரம் ஊர்ந்த பகர வகர மகரங்களைத் தனி விகுதிகள்போல் கருதி அவற்றை நேரடியாகப் பகுதிகளுடன் சேர்த்துப் புதிய சொற்களைப் படைத்துக் கொள்ளும ஒரு புதிய நெறியைத் திராவிட மொழிகள் மேற்கொண்டிருக்கக்கூடும். இந்த நெறியில் அமைந்த உகரம் ஊர்ந்த பகர வகர மகர ஈற்றச் சொற்களை மென்றொடர்ப்புகர ஈற்றுச் சொற்களாக உருவமைக்க முடியாது.

பின்வரும் குகர ஈற்றுச் சொற்கள் உகரம் ஊர்ந்த வகர ஈற்றினவாகத் திரிந்து அமைவதாகத் திராவிடமொழியியலார் கருதுகின்றனர்.

தமிழ் : மகன் – மவன், அடகு – அடவு, கடுகு – கடுவு, முதுகு – முதுவு, பாகு – பாவு, ஆகு – ஆவு, சாகு–சாவு, வேகு–வேவு, முழுகு–முழுவு.

கன்னடம்: ஒதகு (odagu) – ஒதவு (DED 520), முருகு murugu)– முருவு (DED 4082), முழுகு (muLugu) முழுவு (DED 4096), ஒளகு (olagu) – ஒளவு (DED 853), முழகு (muLagu)–முழவு (DED4096)

தெலுங்கு; கடுகு [kadugu] – கடுவு 'கழுவுதல்' [DED 1154]
தறுகு [tarugu] – தறுவு 'அரிதல்' DED 2562]
நாலுகு [na:lugu] நாலுவு 'நான்கு' [DED 3024]
பொருகு [porugu] – பொருவு 'அண்டை, அயல் [DED 3709]
பொக [poga] – பொவ 'புகை' [DED 3483]

உகரம் ஊர்ந்த ககர ஈற்றுச் சொற்களும், வகர ஈற்றுச் சொற்களும் மேல் எடுத்துக் காட்டுகளில் ஒரே பொருளை உணர்த்துவதால் ககரம் வகரமாகத் திரிந்ததெனக் கொள்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. வல்லொலிகளிடையே

காணப்படும் பொதுவான சில தனி வண்ணங்களை [Distinctive Features]க் கருத்தில் கொண்டு ககரம் வகரமாகத் திரிவதற்கான வாய்ப்பு உண்டு என ஒலியியலார் கருதுகின்றனர். வரலாற்று நிலையில் ஆராய்ந்து முடிவு காணவேண்டிய ஒன்றை இவ்வாறு ஒலியியல் மட்டத்தில் முடிவுகாண முயல்வது பொருத்தமாகத் தோன்றவில்லை. ககரத்தின் பிறப்பும் வகரத்தின் பிறப்பும் இரண்டு கோடிகளில் நிகழ்வனவாதலால், முன்னது பின்னதாகத் திரிந்தது எனக்கொள்வது உண்மையான ஆராய்ச்சியாகாது. மேல் எடுத்துக் காட்டுகளில் உகரம் ஊர்ந்த வகர ஈற்றினைப் பகரத்தின் திரிபாகக்கொண்டு அதற்கேற்ப அவற்றின் தொன்மை வடிவங்களை ஆராயமுற்படுவதே பொருத்தமாகத் தோன்றுகின்றது.

தமிழில் மொழியிடையில் நிகழும் வகரத்தைப் பகரத்தின் திரிபாகக் கொண்டு பின்வரும் சில எடுத்துக் காட்டுக்களின் தொன்மை வடிவங்களை மென்றொடர்ப்புகர ஈற்றனவாக உருவமைக்கலாம்.

1. அவன் / அவள் / அவர் / அவை } < * அவு — < * அபு — < * அம்பு — அன் / அள் / அர் / ஐ [< அய்]
2. கிழவன் / கிழவி } < * கிழவு — < * கிழபு — < * கிழம்பு — அன் / இ
3. பரவை < *பரவு — < *பரபு — < *பரம்பு–ஐ [< அய்]
4. புலவி < *புலவு — < *புலபு — < *புலம்பு–இ.

தமிழில் நடைபெறும் **செய்தவன் செய்தவள் செய்தவர் செய்தவை** ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களும் **செய்தபடி** என்னும் வாய்பாட்டு வினையடைகளும் [Adverbs] பெயரெச்சங்களின் மீது அமைக்கப் பெற்றனவாக வண்ணனை இலக்கணங்கள் [Descriptive Grammars] ஆராய்கின்றன. வரலாற்று அமைப்புக்களை வண்ணனை ஆய்வு

முறைகள் எங்ஙனம் சிதைத்து விடுகின்றன என்பதற்கு மேற்படி வாய்பாட்டு வடிவங்கள் பெயரெச்சங்களின் மீது அமைந்தன எனக் கொள்வதைச் சிறந்த எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். உண்மையில் மேற் குறிப்பிட்ட வாய்பாட்டு வடிவங்கள் அனைத்தும் *-**செய்தம்பு** என்னும் வாய்பாட்டுப் பகுதிகளின்மீது அமைந்தனவாகக் கொள்வதே பொருத்தமாக தோன்றுகின்றது. ***செய்தம்பு***— வாய்பாட்டுப் பகுதிகளில் புகரக்கிளவியின்முன் அமைந்த மகரம் கெட்டு, ***செய்தபு***— வாய்பாட்டுப் பகுதிகள் அமைந்து. பின்னர் உயிர்களிடைத் தனித்து நிகழும் பகரம் வகரமாகத் திரிந்து ***செய்தவு***— வாய் பாட்டு, வடிவங்கள் அமைந்தனவாகவும், அவற்றின் மீது ஏனைய விகுதிகள் பொருந்தி மேலே குறிப்பிட்ட வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களும், வினையடிகளும் தோற்றம் கொண்டனவாகவும் கொள்வது பொருத்தமாகத் தோன்று கின்றது. தொடக்கத்தில் ***செய்தம்பு*** வாப்பாட்டு வினைகள் முற்றுப் பொருண்மையை உணர்த்தினவாகக் கருதலாம் இங்ஙனம் கருதுவதற்குப் பழங்கன்னடத்தில் வழங்கிய நிகழ் கால வினைமுற்றுக்கள் துணை புரிகின்றன [1]

---

1. Gender in Dravidian [Page 172]. A. S. Kedilaya [Dravidian Linguistics [Seminar Papers]. Annamalai University. 1969.

பந்தபன் [bandapan < bandapu—an] 'வருகிறான்'

பந்தபள் [bandapal < bandapu—al] 'வருகிறாள்'

பந்தபுது [bandapudu < bandapu—du] 'வருகிறது'

பந்தபெம் [bandapem < bandapu—em] 'வருகிறேன்'.

"தமிழில் தூய்மை ஏற்றுக்கு"

மதுரைத் தமிழ்ச்சங்க சார்பில் ஒவ்வொரு ஞாயிறன்றும் வெவ்வேறு பொருள் பற்றி ஆராயச்சி சொற்பொழிவு நிகழ்த்த தமிழ்ச்சங்கம் முடிவு செய்துள்ளது. அதன்படி பேராசிரியர் டாக்டர் திரு. இலக்குவனுர் அவர்கள், "தமிழில் தூய்மை எற்றுக்கு'' என்ற தலைப்பில் முதல் சொற்பொழிவை நிகழ்த்தி ஞர்கள். அச்சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு.

உலக மொழிகளில் மிகவும் தொன்மை வாய்ந்தவை சீனம், இலத்தீன், கீப்ரு, வடமொழி, தமிழ் முதலியன. அவற்றுள் வடமொழி பேச்சு வழக்கிழந்து, நூல் வழக்கிலேயே தேங்கிக் கிடக்கின்றது. கீப்ரு, இலத்தீன் முதலிய மொழி களும் பேச்சு வழக்கில் இல்லை. சீனமொழி பலகோடி மக்களால் பேசப்படினும், எழுத்துக்கள் மிகுந்து கற்பதற்கு இடர்பாடு நிறைந்து காணப்படுகின்றது.

ஆயின் தமிழ் மொழியானது தொன்மையிலும், மாருத் தன்மையிலும் உலக வழக்கிலும் சிறந்து விளங்குவதோடு, கற்பதற்கும் எளிமையாகவும், இனிமையாகவும் அமைந்து இன்பம் பயக்கின்றது.

தொல்காப்பியம் கி.மு. 7ஆம் நூற்ருண்டில் தோன்றியது என்பர். அதன் பாயிரத்தில், பனம் பாரனுர், "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்'' எனத் தமிழ்நாட்டைக் குறிப்பிடு கின்ருர். தொல்காப்பியத்துள்ளும், செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்'' எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்ருர். கி. பி 7ஆம் நூற்ருண்டிலேயே தமிழ்நாட்டில் செந்தமிழ் இயல்பாக அமைந்திருந்தது என்று சொன்னல், தொல்காப் பியர் காலத்திற்கு முன்பே கொடுந்தமிழை நீக்கிச் செந்தமிழை

சீர்பெற அமைத்து இருந்தனர் என்றால், தமிழ்மொழி என்று தோன்றியது, எக்காலத்து, இலக்கிய வளமும், இலக்கண வரம்பும் பெற்றது என்று கூற இயலுமா? ஏடறியாக் காலத்திலேயே தோன்றி வளர்ந்தது தமிழ்; எல்லா மொழிகளிலும் மிகமிகத் தொன்மை வாய்ந்தது தமிழ்;

தொல்காப்பியத்திலேயே செம்மைப்படுத்தப்பட்ட தமிழ் மொழியை, செந்தமிழை வளர்ப்பதையே இந்நான்காம் தமிழ்ச் சங்கமும், தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதனால் தான், ''செந்தமிழ்'' – என்ற பெயரால் திங்கள் இதழ் ஒன்று தொடங்கி நடத்தி வருகின்றது. மேலும் செந்தமிழ்க் கல்லூரி ஒன்றையும் அன்றே தொடங்கி நடத்தி வருகின்றது.

தூய தமிழ் இயக்கம் ஏன்?

தமிழ் மக்கள் இமயம் முதல், குமரி வரை வாழ்ந்த காலம் ஒன்று இருக்க வேண்டும். மோகஞ்சதோரா, கரப்பா முதலிய நாகரிகச் சின்னங்கள் அவ்வரலாற்றை நமக்கு எடுத்தியம்பு கின்றன. ஆரிய நாகரிகம் வடநாட்டில் பரவியதால் நாம் அதனை இழந்தோம். தொல்காப்பிய பாயிரத்தில் கூறப்படும் எல்லைகளும் இன்று சுருக்கி விட்டன.

''வடவேங்கடம், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்'' – இன்று எங்கே? வடமொழிக் கலப்பால் எழுத்தச்சன் தோன்றி தனி இலக்கணவரம்பு அமைத்ததால், மலையாளமொழி தோன்றியது. நாம், தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியை இழந்தோம். நமது வேங்கடமலையையும், சுற்றியுள்ள பகுதிகளையும், இழந்ததால் வட எல்லையும் சுருங்கியது. இவ்வாறு பிறமொழிக் கலப்பால், நமது நாட்டையும், நாகரிக வளங்களையும் இழந்ததால்தான் தூய தமிழைப்பேணி வளர்க்க வேண்டியது நமது கடமையாகின்றது.

6 ஆயிரம் கல் தொலைவிற்கு அப்பாலிருந்து வந்த ஆங்கிலேயர் நமது மொழியைக் கற்று, அதன் சிறப்பையும்,

சீர்மையையும் எடுத்தியம்பிய பின்னரே நாம் அதனைத்தெரிந்து கொண்டோம். கடந்த 30 ஆண்டுகளாகத் தனித்தமிழ் இயக்கம் மேலோங்கி வளர்ந்தது. அதனால் எல்லா இதழ்களும் வடசொல், ஆங்கிலச்சொல் முதலிய பிற மொழிக் கலப்பின்றி தூய தமிழிலேயே எழுதி வந்தன.

ஆயின், இப்போது சில இதழ்கள் கலப்புத் தமிழில் எழுதத் தொடங்கியுள்ளன. கலப்புத்தமிழில் பேசினால் என்ன தவறு எனச்சிலர் கூறத் தொடங்கியுள்ளனர். ஆங்கிலம் பல மொழிகளின் கூட்டுறவால் வளர்ந்து வந்துள்ளது. உலகில் பத்தில் ஒரு பகுதி மக்கள் ஆங்கிலம் பேசுகின்றனர்; நன்கு வளர்ந்துவிட்ட மொழி ஆங்கிலம். நாலரைக்கோடி மக்கள் தான் தமிழ் பேசுகின்றனர்.

வீட்டுச் சமையல் போன்றது தமிழ். அது, கலப்பின்றித் தூய்மையுடன் அமைந்துள்ளது. குடுகுடுப்பைக்காரன் பிச்சை எடுத்த சோறு பல வகையாகக் கூட்டுச்சோறாக இருப்பதைப் போன்றது ஆங்கிலம் ஆகும். இலத்தின் கீரிக்கு முதலிய மொழிச் சொற்களின் கலப்பே ஆங்கிலம். ஆங்கிலம் போலத் தமிழ் மொழியையும் கலப்பு மொழியாக்க இயலாது.

உரையாடலில் ''லௌடு ஸ்பீக்கர்'', ''ரிடைடு'' என்பன போன்ற ஆங்கிலமொழிச் சொற்களைக் கலந்து பேசுகின்றனர். அவற்றிற்குப் பதிலாக ஒலிபெருக்கி, ஒய்வு பெற்றவர் என்ற தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால் புரியாதா ? வழக்கில் பேசுவனவற்றையெல்லாம் அப்படியே எழுத வேண்டியதில்லை. பேச்சு வழக்கு வேறு எழுத்து வழக்கு வேறு. இரண்டிற்கும் வேறுபாடு என்றும் இருக்கும். அவ்வேறுபாட்டை நீக்க இயலாது.

திராவிடம் என்ற சொல்லிலிருந்து தமிழ் என்ற சொல் வந்ததாகக் கூறுவர். தொல்காப்பியத்தில், '' தமிழ் என் கிளவியும் அதனோரற்றே'' எனத் தமிழ் என்ற சொல் பயன்

படுத்தப்படுகின்றது. திராவிடம் என்ற சொல் கி. பி. 7 ஆம் நூற்றுண்டில்தான் பயன்பட்டுள்ளது. எனவே, அக்கருத்து பொருந்தாது. பேரன் பாட்டனைப் பெற்றெடுத்தான் என்பது போன்றது.

சங்க காலத்தில் தமிழர் நாகரிகத்தில் சிறந்திருந்தனர். நீரின் தன்மையையும், வெம்மையையும் காப்பதற்கு "சேமச் செப்பு" என்ற கலம் இருந்தது. பரவியின்ன மேலாடை நெய்த காலம் அது.

அத்தகைய சிறப்புகளுக்குரிய தமிழில், நாம் புதுப்புது பொருள்களைக் கண்டுபிடிக்கும்போது, நல்ல புதுப் பெயர்களை இட்டு வழங்க வேண்டும். அப்போதுதான் தமிழ் வளரும்.

திரைப்படம்:

திரைப் படங்களில் நகைச்சுவை என்ற பெயரால் ஆங்கிலம் முதலிய பல மொழிகளைக் கலந்து பேசச் செய்கின்றனர். கருத்தால் நகைச் சுவையைக் கலக்க வேண்டுமே யொழிய, பிறமொழிச் சொற்களைக் கலப்பதால் நகைச் சுவையை உண்டாக்கக் கூடாது. அது சிறந்த நகைச் சுவையாகாது.

தமிழ் இதழ்கள்:

ஆங்கில இதழ்களில் தமிழைக் கலந்தா எழுதுகின்றனர்? தமிழிதழ்களில் வேண்டுமென்றே பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவது ஏன்? "அபூர்வ சந்திப்பு" என்பதனை, "அரிய சந்திப்பு" எனத் தலைப்பிட்டு எழுதுதல் கூடாதா?

வேற்று நாட்டுப் பொருள்கள் நம் நாட்டிற்கு வரும்போது, சுங்கவரி விதித்துத் தடை செய்வதுபோல, பிறமொழிச் சொற்களையும் தடுக்க வேண்டும். மொழி என்பது, நமது கருத்துக்களை அறிவிக்கும் கருவியாகும். அதனை நன் முறையில் வைத்துக் கொண்டால்தான் நமக்கு பயன்படும்.

தனித்தமிழ் என்று சொன்னல், ''தனித்து + அமிழ்'' எனச் சிலர் சொல்கின்றனர். தனித்து அமிழ்ந்து போவது நன்ரு ஏன வினவுகின்றனர். ஜ. ஸ. ஷ. க்ஷ முதலிய எழுத்துக் களையும் பயன்படுத்தலாமென்றும் எண்ணுகின்றனர். தமிழ்ச் சொற்களை ஆங்கிலேயர் ஆங்கில ஒசைப்படுத்தி பேசுவது போல, தூத்துக்குடி Tuticorin), கன்யாகுமரி (Cap Camarin) தமிழர்களும் பிறமொழிச் சொற்களையும், தமிழ் ஒசைப்படுத்தியே வழங்க வேண்டும்.

தொல்காப்பியரும் அக்காலத்திலேயே

''வடசொற் கிளவி வடலெழுத்து ஒரிஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே''

என்று கூறியுள்ளார். ''வடலெழுத்து ஒரிஇ''– 'வடஎழுத்துக் களை நீக்கி' தமிழ் எழுத்தோடு சேர்த்துப் பயன்படுத்து என்று கூறியுள்ளார். வடலெழுத்துக்களைப் பயன்படுத்தினல் தமிழ் ஒசை கெட்டுவிடும். ஆங்கிலத்தில் இருபத்தாறு (26) எழுத்துக்கள் இருப்பதுபோல், தமிழிலும் - மெய் - 18; உயிரில் குறில்களை நீக்கினல் 12 - 5 = 7 ஆக 25 எழுத்துக்கள் ஆய்தம் ஒன்றினைக்காட்ட-26 ஆகும் மேலும், தமிழ்மொழியில் உள்ளது போன்று வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற ஒலி வேறுபாடுகள் எல்லாம் ஆங்கிலம் போன்ற பிறமொழி களில் வகைப்படுத்தவில்லை.

உலகில் சப்பானியரே மிகுந்த மொழிப்பற்றுடையவ ராவார். பிறமொழித் துணையின்றியே தங்கள் மொழியில் எல்லா அறிவியல்களையும் வளர்த்துக் கொண்டனர். அவர் களைப் போன்றே, நாமும் நம் மொழியை முன்னேற்ற முயல வேண்டும். எல்லாவற்றையும் தமிழ் வழியாக அறியத்திட்ட மிடல் வேண்டும். தமிழ் வளரத தமிழ்ப்பயிற்று மொழித் திட்டம் மிகவும் துணைபுரியும்,

பிறமொழிக் கலப்பால் அறிவு வளராது தமிழ்மொழி அழிரிம். தூய தமிழே அறிவை வளர்க்கும் என்றும் தமிழராக வாழ உதவும், ஆகவே தூயதமிழே வேண்டற்பாலது.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை.

நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வு முடிவுகள்

மதுரைத் தமிழ்ச் சங்கம் 1972 ஆம் ஆண்டு நடத்திய நுழைவு. இளம்புலவர், புலவர் தேர்வின் முடிவுகள்.

தேர்வுக்குழுவின் தலைவராக பேராசிரியர், டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் இருந்து தேர்வின் முடிவை வெளியிட்டுள்ளார்கள்.

நுழைவுத் தேர்வு முடிவுகள்

முதல் வகுப்பில் தேறிய எண்கள்:

1, 7, 14, 18, 21, 29, 32, 33, 35, 43, 45 64 – 66. 70. 87, 89, 99 - 101, 103, 105, 107, 111 130, 135, 140, 151, 172, 174, 175, 184, 213, 217 220.

இரண்டாம் வகுப்பில் தேறிய எண்கள்:

3, 5, 11, 12, 19, 20, 22 - 25, 34, 37, 46 49, 51, 57, 61, 67, 77, 78, 84, 85, 86, 92, 95 - 97 102, 104, 106, 108, 112, 116, 131, 138. 139, 146 – 148 150, 155, 159. 164, 165, 169 - 171, 173, 178, 181 183, 192, 194, 196, 202, 210, 219, 221, 225, 228 234, 237.

மூன்றும் வகுப்பில் தேறிய எண்கள்:

2, 15, 17, 26, 28, 30, 38, 44, 55, 56, 59 60, 62, 68, 71, 74, 79 – 81, 83, 88, 90, 91, 98 109, 115, 121, 123 – 125, 127 – 129, 133, 134, 137 143 - 145, 149, 156, 160, 162, 163, 166, 168, 176 180, 182, 185, 191, 195, 197, 198, 200, 204, 212 214, 216, 218, 226, 231, 232, 235,

இளம்புலவர் தேர்வு முடிவுகள்

முதல் வகுப்பில் தேறிய எண்கள்:

526, 604, 623, 652, 659, 682, 705, 706, 712 718, 731, 834, 1178, 1315.

இரண்டாம் வகுப்பில் தேறிய எண்கள்:

304, 314, 325, 326, 328, 329, 347, 349 – 352 365, 368, 371, 373, 391, 422, 427, 431, 436, 444 468, 488, 489, 492, 510, 512, 527, 530, 551, 554 556, 557, 559, 571, 576, 578, 579, 581, 584, 589 591, 592, 595, 596, 603, 605 - 608, 612, 618, 621 622, 628, 631, 633, 635 – 637, 642 – 644, 647, 654 655, 657, 660 – 662, 665, 673, 674, 684, 696, 701 704, 707, 708, 711, 716, 717, 719, 721 – 723, 725 732, 739, 742, 760, 763, 774, 786, 787, 789, 790 795, 797, 799, 801, 810, 817, 820, 823, 829 - 831 835, 876, 892, 914, 926, 927, 929, 963, 966, 973 978, 988, 999, 1019, 1024, 1042, 1059, 1060, 1110 1111, 1129, 1133, 1136, 1151, 1174, 1182, 1184 1188, 1190, 1205, 1206, 1211, 1214, 1216, 1219, 1254 1260, 1266, 1268, 1272, 1273, 1276, 1283, 1301, 1302 1304, 1308, 1313, 1317, 1318, 1328, 1330, 1339, 1353 1362, 1382, 1386, 1406, 1415, 1432.

மூன்றும் வகுப்பில் தேறிய எண்கள் :

301 – 303, 305, 306, 308, 311, 315, – 317, 319, 320, 322 – 324, 327, 330 – 332, 334 – 336, 338 – 342, 344 – 346, 348, 353 – 356, 358 – 364, 366, 367, 370 372, 374 – 376, 379, 382 – 385, 388, 389, 392, 395– 399, 401, 404 – 413, 415 – 420, 423, 425, 426, 428 – 430, 432, 433, 435, 437 – 440, 442, 443, 445– 451, 453 – 463, 466, 469 – 473, 475, 476, 478, 48– 482, 484 – 487, 490, 491, 493 – 500, 502, 503, 506 – 509, 511, 513 – 516, 518 – 521, 523 – 525, 528 529, 531, 532, 534 – 550, 552, 553, 555, 558, 561 – 569, 574, 577, 580, 582, 583, 585 – 588, 590, 593, 599 – 602, 609, 611, 613 – 616, 619, 620, 624 – 627, 629, 630, 632, 634, 638 – 641, 645, 646 648 – 651, 653, 656, 658, 663, 664, 666 – 669, 671 675, – 681, 683, 685, 687, 689 – 695, 697, 699, 700, 702, 703, 709, 710, 713 – 715, 720, 726 – 730, 733, 738, 740, 741, 743 – 746, 748 – 756, 759, 761, 762 764 – 766, 768 – 772, 775 – 785, 788, 791 – 794, 796, 798, 800, 803 – 806, 809, 811 – 813, 816, 818, 819 821, 822, 824 – 828, 832, 833, 836 – 838, 840 – 842, 844, 845, 847, 849 – 862, 864, 865, 867, 869– 875, 877, 879, 881 – 886, 888, 889, 891, 893, 898– 904, 907, 908, 911, 913, 915 – 920, 922, 923, 925,

928, 930 - 941, 943 - 946, 949, 951 - 954, 956 - 958, 961, 962, 964, 965, 967, 968, 971, 972, 974, 975, 977, 979, 982, 983, 987, 991, 992, 998, 1000, 1004, 1006, 1007, 1013 - 1015, 1021, 1022, 1025, 1028 - 1031, 1033, 1035, 1040, 1043 - 1047, 1051, 1053, 1054, 1064, 1066, 1071, 1075, 1077, 1078, 1080, 1082, 1087, 1088, 1090, 1091, 1096, 1097, 1099, 1100, 1102, 1108, 1109, 1112, 1114 - 1128, 1130 - 1132, 1134, 1135, 1137 - 1146, 1149, 1152 - 1154, 1156, 1157, 1162 - 1170, 1173, 1175 - 1177, 1179 - 1181, 1183, 1185 - 1187, 1189, 1191 - 1198, 1201 - 1203, 1207 - 1210, 1212, 1215, 1221, 1226, 1230, 1232 - 1236, 1239 - 1250, 1252, 1256, 1257, 1259, 1261- 1265, 1267, 1269 - 1271, 1274, 1275, 1277 - 1282, 1285 - 1289, 1291 - 1300, 1305 - 1307, 1309, 1311, 1312, 1314, 1316, 1319 - 1327, 1329, 1331, 1332, 1336, 1338, 1347, 1356, 1367, 1368, 1370, - 1373, 1380, 1381, 1383 - 1385, 1387, 1388, 1390 - 1392, 1894 - 1398, 1400, - 1402, 1405, 1407, 1409, 1411, 1413, 1414, 1416, 1417, 1419, 1421, 1423, 1425 - 1427, 1429, 1430, 1433.

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை.

புலவர் தேர்வு முடிகள்

முதல் வகுப்பில் தேறிய எண்கள் :

1527, 1932, 1966, 2056, 2121, 2122, 2156.

இரண்டாம் வகுப்பில் தேறிய எண்கள் :

1519, 1525, 1526, 1529, 1532, 1533, 1538, 1574, 1586, 1591, 1615, 1618, 1623, 1634, 1643, 1648, 1650, 1661, 1671, 1674, 1793, 1812, 1823 1829, 1833, 1834, 1837, 1844 - 1846, 1848, 1849, 1875, 1878, 1881, 1892, 1895, 1912, 1915, 1919, 1927, 1929 - 1931, 1937 - 1939, 1944, 1946, 1950. 1951 1953, 1956, 1978, 1997, 2007, 2011, 2027, 2028, 2031, 2055, 2068. 2078, 2081, 2082, 2086, 2089, 2098, 2104, 2115, 2116, 2120, 2124, 2126, 2140, 2143, 2157, 2158, 2159, 2162, 2164, 2165, 2170, 2173.

மூன்ரும் வகுப்பில் தேறிய எண்கள் :

1502 - 1509, 1511, 1512, 1514, 1516, 1517, 1521 - 1524, 1530, 1534 - 1537, 1539 - 1545, 1547 - 1554, 1556 - 1563, 1566 - 1572, 1575 - 1582, 1584, 1585, 1587 - 1590, 1592, 1593, 1595 - 1602, 1604 - 1606, 1609, 1611 - 1614, 1616, 1617, 1620 - 1622, 1624, 1625, 1627 - 1633. 1635 - 1642. 1645. 1646 1651

1652, 1654 – 1657, 1662 – 1664, 1666 – 1670, 1672
1673, 1677, 1680, 1683, 1685, 1687, 1688, 1689
1691 – 1699, 1702, 1703, 1704, 1706 – 1710, 1712 –
1720, 1722 – 1726, 1729 – 1731' 1735' 1737 – 1740
1742, 1745 – 1749, 1751 – 7762, 1764, 1767, 1769
1773 – 1777, 1779 – 1781, 1783 – 1786, 1788, 1789
1795 – 1797, 1799, 1800, 1802 – 1804, 1806 – 1809
1811, 1813 – 1819, 1821, 1822, 1824, 1825, 1827
1828, 1830, – 1832, 1835, 1836, 1840 – 1842
1847, 1851, 1852, 1854, 1856 – 1860, 1862 – 1864
1866, 1867, 1870 – 1872, 1876, 1880, 1882 – 1890
1893, 1894, 1896 – 1899, 1902–1906, 1908–1911, 1913
1914, 1916 – 1918, 1920 – 1923, 1925, 1926, 1928
1933 – 1936, 1940 – 1943, 1945, 1947 – 1949, 1952
1954, 1957 – 1965, 1967, 1969 – 1973, 1976, 1979
1981 – 1984, 1986, 1987, 1989, 1990, 1993 – 1996
1998 – 2005, 2008, 2009, 2012, 2014, 2015, 2017 –
2019, 2021, 2022, 2024 – 2026, 2030, 2032, 2033
2034, 2036 – 2042, 2045, 2046, 2048, 2051, 2052
2057, 2064 – 2067, 2069, 2071 – 2073, 2075, 2076
2083 – 2085, 2087, 2090, 2093, 2094, 2096, 2097
2099, 2100, 2103, 2105, 2106, 2109, 2112 – 2114,
2117, 2118, 2123, 2127, 2128, 2130 – 2139, 2141
2144 – 2147, 2150, 2151 – 2155, 2160, 2161, 2163
2166 – 2169, 2171, 2172.

———

சிறந்த மாணவர்கட்குப் பரிசளிப்பு

ஒவ்வொராண்டும் உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி, சென்னை மதுரைப் பல்கலைக் கழகங்கட்குள் அடங்கிய கல்லூரிகள் ஆகியவற்றுக்கு மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்தும் தமிழ்த்தேர்வில் மாநில அளவில் முதல், இரண்டாம், மூன்றும் தகுதிபெற்ற மாணவர்களுக்கு பரிசளித்து ஊக்கமடையச் செய்ய சங்கம் முடிவு செய்துள்ளது.

இப்பரிசுகள் அவ்வக் கல்வி நிலையங்களின் தலைமை ஆசிரியர், முதல்வர் மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

பரிசு, குறிப்பிட்ட தொகையாக வழங்கப்படும்.

1971 – 72 ஆம் ஆண்டு நடந்த தேர்வுகளில் பரிசு பெறுவோர் பெயரும், அவர் சார்ந்த கல்வி நிலையத்தின் பெயரும் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பரிசு பெறும் மாணவர்களைத் தமிழ்ச்சங்கம் உள்ளன்போடு வாழ்த்துகிறது.

பரிசுப் பட்டியல்

உயர்நிலைப்பள்ளி

பரிசு	பெயர்	கல்வி நிறுவனம்
முதல் பரிசு ரூ. 100/-	என். இராதாகிருஷ்ணன்	சேதுபதி உயர்நிலைப்பள்ளி வடக்கு வெளி வீதி, மதுரை-1.
இரண்டாம்பரிசு ரூ.60. (மூவர்) ஒவ்வொருவருக்கும் ரூ. 20/-	ஆர். இராசு	அரசினர் உயர்நிலைப்பள்ளி, சிங்களாந்தபுரம் இராசிபுரம் வட்டம். சேலம் மாவட்டம்.
	ஆறு. ஆறுமுகம்	ஸ்ரீசரஸ்வதி உயர்பள்ளி, கோனுப்பட்டு திருச்சி மாவட்டம்.
	எம். உமாமகேஸ்வரி	சௌராஷ்ட்ர பெண்கள் உயர்பள்ளி 3, நவபத்கானு கோட்டுத் தெரு, மதுரை-1.
மூன்றும் பரிசு ரூ 30/- (இருவர்) ஒவ்வொருவருக்கும் ரூ. 15/-	சி. ஆரோக்கியசாமி	திரு. வெங்கடேஸ்வரா உயர்பள்ளி அப்பநாயக்கன்பட்டி கரடிபாவி - வழி கோவை மாவட்டம்.
	ஆர். கௌரி	அரசினர் உயர்பள்ளி கீழ்ப்பெரும்பள்ளம் தஞ்சை மாவட்டம்.

பரிசுப் பட்டியல்

பயிற்சிப்பள்ளி

பரிசு பெயர்	பெயர் ~~பரிசு~~	கல்வி நிறுவனம்
முதல் பரிசு ரூ. 100/-	அ. நடராசன்	அரசினர் ஆதாரப் பயிற்சிப்பள்ளி அவிஞசி, கோவை—மாவட்டம.
இரண்டாம் பரிசு ரூ. 50/-	T. காஞ்சனு	அரசினர் மகளிர் உயர்பள்ளி வேலூர்: வடஆற்காடு மாவட்டம்.
மூன்றும் பரிசு ரூ. 25/-	ஞா. ஜோஸ்பின் மேரி ஞானம்	புனித ஆனீஸ் மகளிர் பயிற்சிப்பள்ளி அடைக்கலாபுரம் வீரபாண்டியன் பட்டணம் - வழி நெல்லை —மாவட்டம்.

பரிசுப் பட்டியல்

புகுமுக வகுப்பு (P.U.C.) மதுரைப் பல்கலைக்கழகம்

பரிசு	பெயர்	கல்வி நிறுவனம்
முதல் பரிசு ரூ. 100/- (நால்வா) ஒவ்வொருவருக்கும் ரூ. 25/-	கே. ஹம்ஸா ஜாஸ்மின் புவனசுந்தரி கே. உஷா ஜே. ஹேமாம்புஜம்	பாத்திமா கல்லூரி மதுரை-18. ,, ,, ,,
இரண்டாம் பரிசு ரூ.50/- (இருவர்) ஒவ்வொருவருக்கும் ரூ. 25/-	ஆர். இராமராஜ் ஆர். கோமதி	டாக்டர் ஜாஹீர் உசேன் கல்லூரி இளையான்குடி — முகவை மாவட்டம். புனித சிலுவைக் கல்லூரி நாகர்கோவில் - 2, குமரி மாவட்டம்
மூன்றும் பரிசு ரூ. 25/- (மூவர்) ஒவ்வொருவருக்கும் ரூ. 10/-	கே. என். சீனிவாசன் என். மகாலக்குமி மங்கையர்க்கரசி	மதுரைக் கல்லூரி, மதுரை. ஸ்ரீமீனாக்ஷி மகளிர் கல்லூரி, மதுரை. ,,

பரிசுப் பட்டியல்

பட்டவகுப்பு முதலாண்டு மதுரைப் பல்கலைக்கழகம்

பரிசு	பெயர்	கல்வி நிறுவனம்
முதல் பரிசு ரூ. 100/-	கே. சுந்தரராமன்	மதுரைக் கல்லூரி, மதுரை
இரண்டாம்பரிசு ரூ. 50/-	ந. பாண்டி	தியாகராசர் கல்லூரி, மதுரை-9.
மூன்றும் பரிசு ரூ 25/- (இருவர்)	என். செந்தில்நாதன்	மன்னர் துரைசிங்கம் நினைவுக் கல்லூரி சிவகெங்கை முகவை — மாவட்டம்.
ஒவ்வொருவருக்கும் ரூ. 15/-	கே. எம். பானுமதி	ஸ்ரீபழனியாண்டவர் மகளிர் கலைக் கல்லூரி பழனி மதுரை — மாவட்டம்.

பரிசுப் பட்டியல்

பட்டவகுப்பு இரண்டாமாண்டு மதுரைப் பல்கலைக்கழகம்

பரிசு	பெயர்	கல்வி நிறுவனம்
சுமுதல் பரிசு ரூ. 100/-	வெ. அன்புமணி	ஹாஜி கருத்தா ராவுத்தர் கவுதியா கல்லூரி உத்தமபாளையம் மதுரை — மாவட்டம்.
இரண்டாம் பரிசு ரூ. 50/-	கே. லீலாவதி	ஸ்ரீமீனாக்ஷி அரசினர் மகளிர் கல்லூரி மதுரை-2.
மூன்றும் பரிசு ரூ 25/-	டி. அன்புக்கொடி	பாத்திமா கல்லூரி மதுரை—18.

பரிசுப் பட்டியல்

சென்னைப் பல்கலைக்கழகம்

வகுப்பு	பெயர்	கல்வி நிறுவனம்
புகுமுக வகுப்பு ரூ. 60/–	எஸ். பத்மா	கோ. வி கோ. விசாலாட்சி மகளிர் கல்லூரி உடுமலைப்பேட்டை கோவை — மாவட்டம்.
பட்டவகுப்பு முதலாண்டு ரூ. 60/–	ஸ்டெல்லா மெர்ஸி சுந்தரி	,,
பட்டவகுப்பு இரண்டாமாண்டு ரூ. 100/–	என். சின்னுத்தாள்	,,